செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-கஎ] பிரமாதி—மாசி [பரல்-கக

தமிழும் சமயமும் *

[திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்]

தமிழைப்பற்றி இப்பொழுது அடிக்கடி பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. “தமிழில் இலக்கியம் ஏதாவதிருக்கின்றதா?” என்று காகா கலேல்கார் ஒரு தமிழரிடம் கேட்டார். அதற்கு அந்தத் தமிழர், “தமிழில் ஒன்றுமே இல்லை” என்று சொன்னார். ஒன்றுமே இல்லை என்கிற வார்த்தையைக் காகா கலேல்கார் ஒப்புக்கொள்ளவில்லை. “திருக்குறளை நான் படித்திருக்கிறேன். நிறைய இலக்கியங்களில்லாமல் இப்படிப்பட்ட ஒரு புத்தகம் தோன்ற முடியாதே!” என்று சொன்னார். இந்த விஷயத்தைக் காகா கலேல்கார் திருநெல்வேலியில் சொன்னார். அவரே சொன்னார், “தமிழ் நாட்டுக்கு முக்கியமான பாஷை தமிழ் தான்; பிறகுதான் மற்றப் பாஷைகள்” என்று. தமிழ் நாட்டில் பிறந்த ஒரு தமிழர், “தமிழில் ஒன்று மில்லை” என்று சொன்னால், தமிழைப்பற்றி அடிக்கடி பேசவேண்டியது அவசியந்தானே? ‘தமிழில் ஒன்றுமே யில்லை’ என்று அவர் சொன்னதற்குக் காரணம் பள்ளிப்படிப்பில் ஏற்பட்ட கசப்புத்தான். பள்ளியில் சொல்லிக் கொடுக்கும் முறைதான் இதற்குக் காரணமாகும். ஆனால் பாரதியார் சொல்கிறார்:

வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே.
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.

---

*காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தின் இருபத்திரண்டாவது ஆண்டு நிறைவுவிழாவில், திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் ‘தமிழும் சமயமும்’ என்னும் பொருள்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

உண்மைகள் எல்லாப் பாஷைகளிலும் தோன்றி யிருக்கின்றன. கிரேக்கர்கள் எழுதிய நூல்களில் சைவசமயத்தார் சொல்லிய உண்மைகளைக் காண்கின்றோம். பல்லாயிரக் கணக்கான வருடங்களாகக் கடவுள் தத்துவத்தை ஆராய்ந்து முடிவுகட்டி யிருக்கிறார்கள் நமது பெரியோர்கள். கடவுள் தத்துவம் நடராஜர் சிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. பரதநாட்டியம் எவ்வளவு உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது? சமயத்தை நடனக்கலையில் புகுத்தினார்கள்; சங்கீதத்தில் திணித்தார்கள் நம் பெரியோர். உண்மைகளிலெல்லாம் உண்மை, சங்கீதத்தில்தான் இருக்கிறது. இசைக்கலை சமயத் தோடு ஒட்டப்பட்டதாகும்.

கடவுளின் உண்மைத் தத்துவத்தை அறிவது சிரமமான காரியமா? "ஒரு கவிமாதிரி எளிமையாய் இருக்கிறாய்!" என்றார் கவி தாகூர். ஆனால் "எளியை நீ அரியை நீ" என்றார் இன்னொரு பெரியார். எளியவனும், ஆனால் அறிவதற்கும் அகப்படாதவனும்!

ஜடவஸ்துக்களாகிய கல் மண் முதலியன உயிர்த்தத்து வத்தை யடையவே நாட்டமுற் றிருக்கின்றன. கத்தரிக்காய் விதை பார்ப்பதற்கு எவ்வளவு சிறியது? அதைப் போட்டால் பெரிய செடி முளைக்கிறது. கல் மண் எல்லாம் உயிர்பெற்றுக் காயாக மாறுகின்றன. ஜடவஸ்துக்கள் உயிர்பெற்றபின் உணர்ச்சியைப்பெற விரும்புகின்றன. கத்தரிக்காயை மனிதன் சாப்பிடுகிறான். தேகத்தோடு ஒட்டுகிறது. உணர்ச்சி உண்டா கிறது. இது கடவுள் தத்துவம். இதை சயன்ஸால் மட்டும் அறியமுடியாது. உரம் போடலாம். உள்ளேயிருக்கும் தத்துவத்தை அறிய முடியுமா? இதைப் பட்டினத்தார் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லியதை ஒரு ஜெர்மானியனிடம் சொன்னால், "ஏதோ நம்முடைய நூலைப் படித்துவிட்டுத்தான் சொல்லி யிருக்கிறான்" என்று சொல் வான். பட்டினத்தார் பின்வருமாறு பாடுகிறார்:—

ஊன்தேடும் உயிரேயோ
உயிர்தேடும் உணர்வேயோ
வான்தேடும் மறையேயோ
மறைதேடும் பொருளேயோ
தான்தேட ஜகமெல்லாம்
உடன்தேடத் தன்னைத்தான்
நான்தேடி நான்காண
நானோ நானோ.

இன்னொருவர் இந்தத் தத்துவத்தை அடையாள மூலமாக எவ்வாறு விளக்கி யிருக்கிறார் பாருங்கள்!

“ வடவரையை மத்தாக்கி
வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள்
கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார்
கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய்
மாயமோ மருட்கைத்தோ.”

வடவரையென்பது மேருகிரி; ஒரு நட்சத்திரம். வாசுகி யென்பது ஆகாயத்தில் தோன்றும் பால்வெளி (Milky way). இறைவன் அன்புக்குக் கட்டுப்படுபவன்; கடவுள்தான் எல்லா வற்றையும் பிறக்கச் செய்தான் என்றது தத்துவம். இந்தத் தத் துவங்களை வேறுபாஷைகளில் இவ்வளவு அழகாகச் சொல்ல முடியாது. கடவுள் தத்துவத்தைக் கவி மூலமாகத் தான் சொல்லலாம். குலசேகராழ்வார் இராமாயணத்தைக் கேட்டுக் கொண்டே யிருந்தாராம். இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும் கட்டம். கேட்டுக்கொண்டிருந்த அரசர், உடனே தன் படையை இராவணனுடன் யுத்தத்துக்கு அனுப்பும்படி உத்தரவிட்டாராம்! அவ்வளவு பற்றுதலுடன் கேட்டிருந்தா ரென்பது பொருள். “நீ குழந்தையாக ஆனாலொழிய கடவுள் அருளைப் பெறமுடியாது” என்று மேனாட்டில் ஒரு முதுமொழி. இது குழந்தைத் தத்துவம். குலசேகர ஆழ்வார் அந்த நிலைமையிலிருந்தார் என்பதையே இந்த உதாரணம் விளக்குகின்றது. அப்பேர்ப்பட்ட குலசேகராழ்வாரைப்பற்றி ஒருவர் புகழ்ந்து பல கவிகள் பாடியிருக்கின்றார். ஒருவரைப் புகழ்ந்து பாடும்போது, அவரைக் காதலனாகவும், பாடுபவர் காதலியாகவும் வைத்துப் பாடும் முறை ஒரு தீவிர முறை யாகும். அதற்கு அனுதிவேகம் வேண்டும். அந்த முறையில் இந்தக் கவி குலசேகர ஆழ்வாரை நாயகனாக வைத்துப் பாடி யிருக்கின்றார்.

ஒரு நாயகி ஆழ்வாரைக் காதலிக்கிறாள். அவள் அருமை யாக வளர்க்கும் கிளி கொடியில் உட்கார்ந்திருக்கிறது. அதை உபசாரவார்த்தை சொல்லிக் கூப்பிடுகிறாள். கவி வருகிறது:

“இன்னமுதம் ஊட்டுகேன்
இங்கேவா, பைங்கிளியே!
தென்னரங்கம் பாடவல்ல

சீர்ப்பெருமாள்—பொன்னம்
சிலைசேர் நுதலியர்வேள்
சேரலர்கோன் எங்கள் !
குலசே கரனென்றே கூறு !"

மேனாட்டுக் கவிகளெல்லாம் இயற்கையைப்பற்றி அதிகமாகச் சொல்வார்கள். ஆனால், கம்பர் வர்ணனையில் இருதய உண்மை இருக்கும். இயற்கையைப்பற்றிச் சொன்னாலும் பக்தியை வைத்துக்கொண்டு சொல்வார். அவர் யுத்த காண்டத்தில்,

உண்டே யென்னில் உண்டேயாம்
இலதென் றுரைக்கில் இலதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னே பிழைப்பம்மா.

என்று சொல்கிறார். கடவுள், உண்டென்பவருக்கு உண்டு; இல்லை யென்பவருக்கு இல்லை யென்பது பொருள்.

நமது பெரியவர்களெல்லாம் உண்மையை அறியக், காட்டுக்கும் மலைக்கும் போகச் சொன்னார்கள். இதுதான் அவர்கள் கொண்ட இயற்கைத் தத்துவம். அங்குப் போனால் ஆணவம் மறைந்துபோகும்: ஆணவத்தை நீக்குவதுபோன்ற கஷ்டமான காரியம் வேறில்லை ஊரைவிட்டு மலைகளில் போயிருந்தால், கடவுளின் சக்தி புலப்படும். நான் என்ற ஆணவம் மறைந்துபோம். இதனாற்றான், கடவுள் தத்துவங்களையும் இயற்கையோடு இணைத்துப் பாடியிருக்கின்றார்கள். திருப்பதி மலையைப்பற்றி ஒருவர் பாடியிருப்பதைப் பாருங்கள் !

கூன்கொண்டு சென்றவன் கூன்நிமிர்ந் தோடக்
குருடன்கொம்பில்
தேனென்று காட்ட முடவனத்தேனை
யெடுக்கவயல்
தானின்ற ஊமை எனக்கென்று கேட்கத்
தருவன்வரம்
வானின்ற சோலை வடமலை மேல் நின்ற
மாதவனே.

உண்மைகளெல்லாம் இம்மாதிரி பாட்டுக்களின் உள்ளே அமைந்து, கிடக்கின்றன. இது இயற்கையும் கடவுள் தத்துவமும் இணைக்கப்பட்ட பாட்டு. கவிக்குள்ளே வைத்துவிட்டால் அழியாது என்று அப்படித் தத்துவங்களை அமைத்துப் பாடியிருக்கிறார்கள்.

நாமக ளம்மானை

வெண்டா மரைத் தவிசில் மேதகவே வீற்றிருப்பாள்
பண்டார் கலைச்செல்வி பண்புறவே யம்மானை
பண்டார் கலைச்செல்வி பனிமலரே மேவுமெனில்
அண்டாதோ நற்புலவர் அகமதில்கா ணம்மானை
அலரோ டகமொப்பென் றுய்ந்தனர்கா ணம்மானை. (௧)

வெள்ளத் திடையொதுங்கும் வெண்மலரார் சேயிழையாள்
கள்ளப் பிறப்பெனுநோய் கட்டவிழ்க்கு மம்மானை
கள்ளப் பிறப்பெனு நோய் கட்டவிழ்க்கு மாமாகில்
எள்ளப் படுநெஞ்ச மேங்குதலேன் அம்மானை
இறைஞ்சும் வகையறியா தேங்குதல்கா ணம்மானை. (௨)

கலையா ரெழிலணங்கின் கருணைசேர் மாந்தரிவண்
மலைசேர் புகழமைந்து வாழுவர்கா ணம்மானை
மலைசேர் புகழமையும்; வாழுதற்கங் காடகத்தாள்
நிலைசேர் அருள்புரிந்து நிற்குங்கொ லம்மானை
நிறைகலையாற்செல்வமெலாம் நிறையுமன்றே யம்மானை: (௩)

செந்நாப் புலவர்கடஞ் சிந்தைச் செழுந்தொட்டில்
மன்னிவளர் வாளெந்தாய் மடமயில்போ லம்மானை
மன்னி வளர்வாள் மடமயில்போ லாமாகில்
கன்னிப் பருவங் கடந்திலள்கொ லம்மானை
கன்னியே யெனினுமவள் கலைபெறுவா ளம்மானை. (௪)

நான்முகன்றான் செய்தவொரு நற்றவம்போ னுவமர்ந்து
நான்மறையு நற்பொழிலு நல்குவள்கா ணம்மானை
நான்மறையு நற்பொழிலு நல்குவளே யாமாகில்
நான்முகன்றான் செய்யுமொரு நற்றொழிலே தம்மானை
நாயகியார் செய்தொழிலி னலம்வியப்பா னம்மானை. (௫)

அமிழ்தேயா யன்பரக மார்தலினா லன்னையினைத்
தமிழாய்ப் பிறந்ததெனச் சாற்றுவர்கா ணம்மானை
தமிழாய்ப் பிறந்ததெனச் சாற்றுவரே யாமாகில்
அமையுமோ தந்தையென வகத்தியனா ரம்மானை
அறிவாற் சிவனா ரவரலரோ வம்மானை. (௬)

—சி. து. கன்னிசாமி.

(௬) நாமகள் சிவபெருமான் புதல்வி யென்பது புராணக் கூற்று.

இலக்கிய நூல்களின் அமைதி

[இளவழகனார்]

ரு

இனி இவ் 'இலக்கணம்' 'இலக்கியம்' என்பவற்றை முறையே 'கலை' 'இன்கலை' யெனவுங் கூறலாம். இதன்கண், மற்றொன்றும் அறிதல் இன்றியமையாததாகும்.

இலக்கணங்கள் கூறுங் கலைநூல்கள் வெறுங் கருத்துகளை மட்டுங் கூறிச் செல்லுதலின், அவற்றுள் இலக்கியச்சுவை யென்னும் இன்சுவை முறை இல்லை. ஆனால், இலக்கிய நூல்களுள், இவ் இன்சுவை முறையோடு இலக்கண நூல்களுட் கூறப்படுங் கருத்துக்களும் அமைந்து கிடக்கின்றன. ஆகையால், 'இலக்கணம்' 'இலக்கியம்' என்னும் பெயராற் கூறும்போது, இலக்கணத்துள் இலக்கிய மில்லை, ஆனால் இலக்கியத்துள் இலக்கண மிருக்கின்றது எனவும, அவற்றையே 'கலை' 'இன்கலை' எனக் கூறும்போது, கலையில் இன்கலை இல்லை, ஆனால் இன்கலையிற் கலை அடங்கியிருக்கின்றது எனவுங் கூறலாம். இவ்வாற்றால், இலக்கியம் என்னும் இன்கலையிற் கருத்துக்களும் கருத்துக்களை இன்சுவையாக ஊட்டும் முறைகளுமென எல்லா மிருக்கின்றன என அறிகின்றோம்.

இதனால் இலக்கிய நூல்களின் இன்றியமையாமையும் ஒருவாறு விளங்கும்.

இனி, இலக்கியம் என்னும் இன்கலையின் பிரிவுகளை ஏனை 'இசை' 'பாட்டு' 'ஓவியம்' 'சிற்பம்' முதலான இன்கலைகளெனவுந் தெளிதல் வேண்டும். இலக்கியம் என்பது வெறும் நூல் எனவே கொள்ளலாகாது. உலகத்தில் நம் அறிவையும் உணர்வையுங் கவர்ந்து அவற்றைத் தம் வயமாக்கும் இனிமைகள் எவ்வெவையோ, அவையெல்லாம் இலக்கியங்களேயாம் ஆகவே, அவ்வினிமைகளை யெடுத்து அங்ஙனமே இனிமை தோன்றக் கூறும் நூல்களும் இலக்கியங்களாயின. திருஞானசம்பந்தப் பெருமான் போன்ற அருளாசிரியர்களுக்கு உலகமெல்லாம் இலக்கியங்களாகவே தோன்றின. இவ்விலக்கியங்கள் காணப்படுவனவாயு மிருக்கலாம்; அல்லது கேட்கப்படுவன சுவைக்கப்படுவன முகரப்படுவன தொட்டறியப்படுவனவாயு மிருக்கலாம்; அல்லது நினைக்கப்படுவன அறியப்படுவன உணரப்படுவன நெகிழப்படுவனவாயு மிருக்கலாம். இவ் விலக்கியங்கள் இயற்கை நிலைகளாயு மிருக்க

லாம் ; அன்றி, அவ் வியற்கை வழுவா தியற்றப்படுஞ் செயற்கை நிலைகளாயு மிருக்கலாம்.

கேட்போர் உணர்வு தம் வயமாகும்படி இனிய இசைய மைவுகள் பொருந்த இசைப் புலவ ரொருவர் மிகவும் உருக்கமாக இன்னிசை பாடுகின்றா ரென்று வைத்துக்கொள்வோம். அவ் இசை அப்படியே இலக்கிய மெனத்தகும் ; இன்கலை யெனத் தகும். அவர் பாடுங்கால், இசைக்குரிய இலக்கணங்களெல்லாம் அதன்கண் வழுவாது பாடுதலின் அவ் விலக்கியத்தில் அதன் இலக்கணமும் அடங்கி நிற்றல், அதாவது அவ் இன்கலையில் அதன் கலையும் அடங்கி நிற்றல் சொல்லாமலே பெறப்படும்.

இங்ஙனமே, கனிந்த எழில் வாய்ந்த நங்கையொருத்தி இனிய யாழ்ஒன்றைத் தனது இடத் தோளிற் சார்த்தி அதன்கண் இசை மீட்டியபடியாய் உணர்வு ஒன்றி உளம் நெகிழ்ந்து கனிந்துருகுகின்ற அழகிய தோற்றம் அவள் மலர்முகத்தில் துளும்பித் தோன்றுமாறு, வினைத்திறம் வல்ல சிற்பியொருவர் சிறந்த செதுக்குருவம் ஒன்றை உண்மை பிறழாமல் உருவாக்கி யமைத்திருக்கின்றாரென்று நினைவுகூர்வோம். அத் திருவுருவம் அப்படியே இலக்கியமேயாம். இனி, அதன்கண், அவ்வுருவக்கலைக்குரிய அளவைகளெல்லாம் இனிது பொருந்தி அடங்கிநிற்றலையும் அறியாதார் யார் ?

தன்னை மறந்த நிலையில் உண்மையான இலக்கியங்கள் தோன்றுமிடமெல்லாமும் அவ்வவற்றின் இல்க்கணங்கள் அவ்வவைதம்மில் இயற்கையாகவே அமைந்திருக்குமென்றும் அறிதல்வேண்டும். இங்ஙனமே பிறவுங் கொள்க.

சுருங்கக் கூறுங்கால், ஐவகைப் புலன்களாலும், ஏனை அகக்கருவிகளாலும், அவற்றிற்கும் அப்பாற்பட்ட உயிருணர்வாலும், அவ்வுணர்வழிந்து நின்ற பெருநிலையான உணர்வரிய உணர்வாலும் நுகரப்படும் இனிமைகள் என்னென்னஉண்டோ அவையெல்லாம் இலக்கியங்களேயாம் என்று கொள்ளல் வேண்டும். இக் கருத்தேபற்றிச் சிறந்த ஆங்கில ஆராய்ச்சி யாசிரியரான ஷெல்லி (Dr. Shelley) என்பாரும் ஓர் அரிய ஆராய்ச்சிக் கட்டுரையில், "மொழி, நிறம், உரு, சமயமும் நல்லொழுக்கமும் பற்றிய செயற்பழக்கங்கள் என இவையெல்லாம் பாட்டுக்குக் கருவிகளாகவும் முதற்பொருள்களாகவுமிருக்கின்றன" எனத் தெளிவாகக் கூறி விளக்குகின்றார்.* மொழிகள் வாயிலாக நல்லிசைப் புலவர்கள்பாற் பாட்டு

* English Critical Essays, P. 125.

அரும்புதல்போலவே, பல நிறங்கள் வாயிலாக ஓவியப் புலவர்களிடமும், உருவங்கள் வாயிலாகச் சிற்ப வினைஞரிடமும், ஒழுக்கங்கள் வாயிலாகச் சான்றோர்களிடமும் அப் பாட்டு அரும்புகின்றதென்பது அவர் கருத்து.

இனி, இவ் வெல்லா இனிமைகளும் இறைவன் என்னும் ஓர் இன்பப் பொருளின் இனிமைகளேயாம் என்பதும் நாம் கூர்ந்து கருத்திருத்துதல் வேண்டும்.

> "பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை ...
> கண்ணில் உண்மணி கச்சியே கம்பனே"

> "பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி ...
> எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய் போற்றி"

என்னுந் திருநாவுக்கரசர் தேவாரத் திருமொழிகள் இங்கே பெரிதும் நினைவுகூரற்பாலன.

இனிமைப் பொருளான இறைவன் உலகுயிர்களின் அகமும் புறமும் நிறைந்து துளும்பி நில்லானாயின், யாண்டும் இனிமையென்னும் இலக்கியந் தோன்றாமலே போம். இங்ஙனம் எல்லாப் பொருள்களினுந் தங்கி இன்புறுத்தும் ஒருவன் எவனோ அவனே உலகிற்குத் தலைவன் என்னுங் கருத்தாற்றான், 'இறை' என்னுஞ் சொல் அப்பேரின்பப் பொருளுக்குப் பெயராயிற்று. 'தங்குதல்' என்னுங் கருத்தில் வழங்கும் இச் சொல்லைத் 'தலைவன்' என்னுங் கருத்திலும் நம் முன்னோர் வழங்கி வந்த அருமையை உற்றுநோக்குங்கால், இவ்வுண்மை இனிது விளங்காநிற்கும்.

இங்ஙனமெல்லாம், பார்க்குமிடமெங்கும் நினைக்குமிடமெங்குங் காட்சிப் பொருளாயுங் கருத்துப் பொருளாயும் அங்கங்கே தங்கி நீக்கமறக் காணப்படும் 'இறை' என்னும் இலக்கியத்தை (குறியை) அடைதலே உயிர்களின் நோக்கமாதல்பற்றி, இவ்வினிமைகளும் இவ்வினிமைகளைச் சுவையுணர்வோடு உரைக்கும் எழுத்துக்களும் பிறவுமெல்லாம் 'இலக்கியம்' எனப் பெயர் பெறலாயின.

'இலக்கியம்' என்னுஞ் சொல், 'எண்ணம்' 'நோக்கம்' 'குறி' என்னும் பொருளுள்ளதாகலின், இங்ஙனம் உயிர்களின் எண்ணமாய் நோக்கமாய் அதுவே குறியாயிருப்பனவெல்லாம் இலக்கியமாயினவென்பது. ஆகவே, இலக்கியத்துள் அடங்காத பொருள் உலகத்தில் எதுவுமில்லையென்க.

கலித்தொகையி லொருகதை

[மகிழ்நன்]

(தொடர்ச்சி)

தளர்ச்சி நீங்கிக் கிளர்ச்சியுடன் நடந்த ஒப்பிலான், தன் ஊரையணுகியகாலை சிறிது வெட்க முற்றவனாய், விரைந்து நடந்து எவரையுங் கண்ணெடுத்துப் பாராது வீடு புகுந்தான். தாய்தந்தையர் நிகழ்த்திய வினாக்களுக்கு இரண்டொரு சொல்லால் விடைபகர்ந்து, நீராடுதற்கு வெளியேசென்றான். நீராடு துறையிற் குழுமிய அவ்வூர்க் காளையர், ஒருவரை யொருவர் பழித்தும் இழித்தும் பேசி நகையாடினர். நீந்தி ஒருவரை யொருவர் பிடிக்க முயன்றவர் போட்ட இரைச்சலும், கரையிலிருந்து நீரிற் குதித்தவர் எழுப்பிய ஓசையும், ஆடை தப்பும் ஒலியும் ஒன்றாய்க்கலந்து அவ்விடத்தை அதிரச் செய்தன. அமைதியாய் நின்று குளித்துக்கொண்டிருந்த ஓர் இளமகனுக்குச் சினந்தோன்றுமாறு, ஒருவன் நீருக்குள் மூழ்கி வந்து கால்களைப்பற்றி இழுத்தான். நின்றிருந்தவன் கதுமெனச் சுழன்று நீருக்குள் வந்தவனுடைய குடுமியைப் பிடித்துக்கொண்டான். இருவருக்குந் தொடங்கியது சண்டை. இந்த வேளையில் ஒப்பிலான் ஆண்டுத் தோன்றினான். சண்டையிட்ட இருவரும் அவன்முன் வந்து வழக்குரைத்தனர். பிறர் இட்ட இரைச்சலும் அடங்கிற்று; இவ்வளவு மதிப்பு ஒப்பிலானுக் கவ்வூரிலிருந்தது. அவன் அமைதியாய் இருவர் வழக்கையும் தீர்த்து, நீராடி வீட்டிற்குத் திரும்பினான்.

உண்டபின் அவன் அன்று நடந்தவற்றை ஆராயலானான். மறுநாள் கயற்கண்ணியைச் சென்று காண்பதற்கு ஒரு வழி வகுத்துக் கொள்ள அவன் விரும்பினான். பற்பல நினைவுகள் அவன் உளத்திலெழுந்தன. இவற்றிலெது சிறந்ததென்று அவன் முடிவு செய்யக் கூடவில்லை; ஏனெனின், நினைவுகளைத் தூக்கிப் பார்ப்பதைவிடக் கயற்கண்ணியின் உருவத்தைக் கருதுதல் இனிதாயிருந்ததாதலின். புனத்திற் பிறந்த புள்ளெழுப்புங் குரல் யாழினு மினிதாய்க் காதில் ஒலித்தது. நெடிய கரிய விழிகளும், ஒளிவிடு நறுநுதலும், அமிழ்தமூறுஞ் செவ்வாயு முன்வந்து தோன்றின. இன்பமுந் துன்பமு மொருங்கேதருங் காதலாற் கட்டுண்டு இரவிற்பெரும் பகுதியை உறக்கமின்றிக் கழித்தான் செம்மல்.

பொழுதுபோகும் நேரத்திற் புனத்திலிருந்து அகன்றுள் செல்வி. வையகத்தை விழுங்கவரு மிருள்போல் ஓர் இன்னுமை அவள் உளத்திற் படர்ந்தது. இன்று பிறந்த காதலுணர்ச்சி, அதன் புதுமையாலும் உரத்தாலும் பண்டை நிலையிலிருந்து அவள் நீங்கினமையைத் தெளிவாய்க் காட்டிற்று. குற்றஞ் செய்தவர் நெஞ்சு புழுங்குமாறு அவள் வருந்தினள். அகன்ற இந்நானிலம் பாழாய் விரிந்ததுபோல் அவளுக்குத் தோன்றிற்று. கதிரவன்போல் தன் உளத்தில் தோன்றிய காதலன் நீங்கியபின் உலகம் இவளுக்குப் பாழாய்த் தெரிந்தது வியப் பன்றே! விண்ணிற் பறந்து என்றும்போல் தம் உறைவிடஞ் சென்ற காக்கைகளும், கழுத்தில் தொங்கிய மணிகள் ஒலிக்க வழக்கம்போல் வீடுதிரும்பிய பசுக்களும், நீரிற்கிடந்து சேறு படிந்த உடலுடன் மெல்ல நடந்த எருமைகளும் பண்டுபோல் யாவும் நடக்கின்றமையை அவளுக் கறிவித்தன. தனக்குள் பொங்கிய அமைதியின்மை இவற்றிற் புலப்படாதது அவளுக்கு வெறுப்பைத் தந்தது. வயல் வெளிகளில் வேலை செய்தவர்கள் ஆவலுடன் தம் அகத்தை நாடிச் சென்றனர். கயற்கண்ணிக்கு இன்று அகஞ்செல்வது இனிதாயிருக்க வில்லை.

இதுகாறுந் தன்னோடு வீட்டிற் கேகும்வழியில் வந்து சேரும் மகளிருடன் கூடி விளையாடிக் களிக்குங் கயற்கண்ணி, இன்று அவர்கள் வருமிடங்களை விலகிநடந்து தனியே சென்று இல்லத்தை யடைந்தாள். தன் மகள் விரும்பி யுண்ணும் உணவை யறிந்து அன்னை சமைத்து வைத்ததைக் கயற்கண்ணி உவகைகொண் டருந்தினளல்லள். உணவு கொள்ளுங்கால் தந்தை மிக்க கனிவுடன் கேட்ட அன்புநிறைந்த கேள்விகள் இன்றளவு மவளுக்கெத்துணை இன்பத்தைத் தந்தன! இன்றவை வெறுஞ்சொற்களாய் அவள் காதில் விழுந்தன. பிள்ளைப் பருவங்கடந்து காதற்பருவ மெய்துகின்ற பெண்ணின் நிலை எவ்வளவு உருக்குந்தன்மையது! விரிகின்ற மலர்போன்ற அவள் உளநிலையை எவர் திறம்பட எடுத்துரைக்கக் கூடும்? அந்நிலையிற் பிறக்கும் அச்சங்களையும் ஐயங்களையும் எவரறிந்து வெளியிடுவர்? மணம்வீசும் பொருட்டன்றே மலர்கள் விரிகின்றன? மலரின் மணமும், அழகும், மென்மையும் பெண் களிடத்து முளவென்பதைக் காட்டவன்றோ, இனிய மலர் களின் பெயர்களைப் பெண்களுக் கிடுவது வழக்கமாயிற்று?

அன்னைக்குந் தன் நெஞ்சிலுள்ளதைக் காட்டாது ஒழுகும் பெற்றி காதலாற் பெண்களுக் குண்டாகிறது. அன்னையோடு படுத்துறங்குங்கால் தான் கண்டவற்றையுங் கேட்டவற்றையும் பற்றி நெடுநேரம் பேசுவது கயற்கண்ணியி னியற்கை. அங்ஙு

னம் இன்று மவள் பேசுவா ளென்று அன்னை எதிர்பார்த்தது நிறைவேறவில்லை. பேச்சைத் தொடங்கும் பொருட்டு அன்னை சில பகர்ந்தபொழுது, தூங்கிவிட்டவள்போல் கயற்கண்ணி நடித்தாள். இஃதன்றி, அன்னையின் உடம்பு தன்னைத் தீண்டவும் பொருளாய்த் தனியே ஒதுங்கிக் கண்களை மூடிக்கொண்டு துயில்பெறாது இரவைக் கழித்தாள்.

பொழுதுபுலரும் வேளை வந்தது. "கூவினகோழி, கூவின பூங்குயில்". எழுந்தனள் கயற்கண்ணி. வேலைகளை விரைந்து செய்தனள். பகலவன் தோன்றினன். நீர்கொண்டுவரத் தாமரைக் குளத்திற்குச் சென்றனள் கயற்கண்ணி; குளத்தில் வண்டுகள் முழங்கின. கரையிற் சிலம்புகள் ஆர்த்தன; வந்தனர் சாலியும், வேலியும், கோதையும் மற்றும் பலரும்; மணமாகி இரண்டொரு நாட்களே சென்ற ஒரு மங்கையை எல்லோருஞ் சூழ்ந்து கொண்டு, அவள் கொழுநனையும் அவளையுங் குறித்து நாணத் தக்க பல உரைகள் பகர்ந்தனர். சாலி என்பவள் ஒரு பாட்டைத் தொடங்கினள்; வேலி என்பவள் சிரித்தனள்; குறும்பு நிறைந்த கோதை விடுகதையொன்று விளம்பினள். மணமாகிய பெண் இவைகளுக் கெதிர்மொழி இயம்பும் ஆற்றலின்றித் தலைவணங் கிக் கைகளாற் கண்களை மூடிக்கொண்டனள். இந்த நிலையில் குளக்கரையை நெருங்கிய கயற்கண்ணி, சிறிது மயங்கி அங் கேயே நின்றுவிட்டாள். ஒடுங்கிக் கீழு மேலும் விரிந்த இடையிற் குடமுடன், ஓவியவல்லான் பழுதறத் தீட்டிய உருவம்போல் நின்ற கயற்கண்ணியின் அழகை என்னவென்று சொல்வது! எல்லோருடனும் அளவளாவி, இனியவை பேசி, நகையூட்டுங் கயற்கண்ணியை விரும்பார் ஒருவருமிலர்; யாவரு மொன்று கூடி அவளைச் சூழ்ந்துகொண்டனர். அவளுடைய முகத்திற் சிறிது வேற்றுமை தோன்றியதை யுணர்ந்த ஒருத்தி, "கேட்டிரோ தோழியரே! கயற்கண்ணி கனவிலொரு காதல னைக் கண்டு கண்ணுறங்காது கவற்சிகொண்டனள்" என்று ஒரு பகுதிவேண்டு மென்றும், ஒரு பகுதி விளையாட்டாகவும் விளம்ப, "இருக்கும், இருக்கும்; இல்லாவிடின் இப்படி இவள் விழிப்பாளா?" என்று மற்றொருத்தி புகல, எல்லோரும் நீள நகைத்தனர். "யான் காணுததை நீங்கள்கண்ட புலமை அரிது, அரிது; வியத்தற்குரிது; ஏதேதோ பிதற்றுகின்றீர்கள்!" என்று மொழிந்தனள் கயற்கண்ணி. இவ்வகையி லவர்களை அவள அடக்க முயன்றது வாய்க்கவில்லை. "மிக மிக உயர்ந்து பேசு கின்றாள். நெற்றியில் இவளுக்கு நாணம் ஏன் தோன்ற வேண்டும்?" என வினவினள் கோதை. "நினைவைத் தடுக்க யாரால் முடியும்? அங்ஙனமே கருதுக! எனக்கு நேரமாகிறது.

நெடுநேர மிங்கிருந்தால் அன்னையின் சினத்துக் காளாவேன்'' என்றுரைத்துக் கயற்கண்ணி நீரெடுத்துக் கொண்டு அவ்வி டத்தை விட்டு நீங்கினாள்.

கதிரவன் எழுந்தபின் ஒப்பிலான், தான் நன்கு நினைந்து செய்த ஒழுங்கைப் பின்பற்றி, நல்லுடை யணிந்து, வில்லும் அம்பறுத் தூணியுமெடுத்துத் தலையிற் பூவைச் சூடித் தினைப் புனத்தை நாடிப் பெருமகிழ்ச்சியுடன் போனான். புனத்தை யடுத்துநின்ற குன்றிலேறித் தக்கவோரிடத்தைக் குறித்து ஆண் டுச்சென்று கயற்கண்ணி புனத்திற்கு வருவதை எதிர்நோக்கி யமர்ந்தான். ஒரு நாழிகையாயிற்று. "ஓகோ நேற்று நாமிங்கு வந்ததை எண்ணி அஞ்சி வராதிருக்கின்றனள் போலும்! என் செய்வேன்?'' என்று ஒப்பிலான் இரங்கலானான். ஏற்ற காலத்தில் கயற்கண்ணி புனத்தை நோக்கி வந்தாள். ஒப்பி லானின் உளம் துடித்தது; செம்புனல் முகமெல்லாம் பரவிற்று. தான் செய்ய நினைத்தது தகுதியாமோ என்ற ஐய மவனுக்கு வந்தது. ஆயினும் உறுதியுடன் அவன் தான் வகுத்துக் கொண்டதைச் செய்யத் தொடங்கினான்: சரேலெனக் கீழி றங்கினான் கற்பாறைகள்மேற் குதித்துநின்றும், பள்ளங் கண்ட விடத்துத் தாவிப்பாய்ந்தும், அவ்வப்பொழுது கீழே தரையை உற்றுநோக்கியும், தான் எதிர்பார்த்தது தப்பவில்லை என்ற முகக்குறியோடு மேலே நடந்தும் புனத்தைநோக்கி வந்த அவனது நடிப்பை உண்மையெனவே பார்த்தவர் கொண் டிருப்பர்.

(தொடரும்)

2000 இசைத் தட்டுகளுக்கு ஒரே ஊசி

சாதாரணமாக இப்போதிருக்கும் கிராமபோன் பிரத்தியேக ஊசிகள் 5 ரிகார்டுகளுக்கு மேல் வருவதில்லை. ஆனால் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு விசேஷ ஊசி 2000 ரிகார்டுகளுக்கு வருகிறது. அதாவது 2 வருஷங்களுக்கு வரும். 1938-வது வருஷம் அந்த ஊசியைப் போட்டால் 1940-வது வருஷம் வரையில் வேலை செய்து வரும்.

இந்தப் புதிய ஊசியின் முனை கெம்புக்கல்லால் செய்யப்பட்டி ருக்கிறது. இது ரிகார்டுகளில் 'கர்' என்ற சப்தத்தை உண்டாக்கவோ, அவைகளைப் பாழாக்கவோ செய்யவே செய்யாது. அமெரிக்காவில் இந்தப் புதிய ஊசி ஒன்று 8 ஷில்லிங்குகளுக்கு விற்கப்படுகிறது.

—ஹநுமான்.

அனைவருக்கும் படிப்பு அவசியம்

[ராவ் சாஹேப் வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், G. B. V. C.]

ஆடவர் பெண்டிர் முதியவர் இளையவர் எல்லோருக்கும் கல்வி இன்றியமையாதது. 'ஒருவன் சாகுமளவும் கல்லாத வாறு என்?' என்றபடி ஒவ்வொருவரும் இளமையில் படிக்கத் தக்க அறிவுவளர்ச்சி யுண்டாகியது முதல் முதுமையில் படிக்க முடியாத அறிவுத்தளர்ச்சி ஏற்படும்வரை படித்தல் வேண்டும். ஒரு நாடு பூரண நாகரிக முடையதென்று கூற வேண்டுமானால், அந்த நாட்டிலுள்ள மக்கள் நூறுக்கு நூறு படித்தவர்களாயிருக்க வேண்டும். ஒரு நாட்டில் படிப்பு எவ்வளவு குறைவா யிருக்கின்றதோ அவ்வளவு நாகரிகம் குறை வாயிருக்கின்றதென்பது கூற வேண்டியதில்லை.

மக்கள் உடலுக்கு உணவும் உடையும் ஒதுக்கிடமும் எப்படி அவசியமோ, அப்படியே, அவர்கள் அறிவுக்கு வாசித்தலும் எழுதுதலும் கணக்கிடலும் அவசியமானவைகள். இதனாலேயே "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற முன்னோர் வாக்கு எங்கும் வழங்குவதாயிற்று; எண் கணக்கிடுதலையும் எழுத்து வாசித்தலையும் எழுதுதலையும் குறித்தன.

ஒரு நாட்டின் செல்வத்திலிருந்து அந்த நாட்டவர் ஒவ்வொருவரும், பசியைத் தீர்க்க உணவும், மானத்தைக் காக்க உடையும், மழை வெயிலுக்கொதுங்க ஒதுக்கிடமும் உடையவ ராகச் செய்தலும், ஒவ்வொருவரும் எழுத வாசிக்கக் கணக் கிடத்தெரிந்தவராகச் செய்தலும் அரசாங்கத்தார் செய்து தீரவேண்டிய கடமைகளுள் முதன்மையான கடமைகள். அவர் கள் இக்கடமைகளை நிறைவேற்றுவதற்குச் செல்வவான்களும் கல்விமான்களும் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்யக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

ஒரு நாட்டு வரும்படியில் மேலே கூறிய இன்றியமையாத செலவுகளுக்கும் மருத்துவம் போக்குவரவு சாதன முதலிய செலவுகளுக்கும் போக மிஞ்சுவதே அந்நாட்டுத் தோட்டி முத லாகாத் தொண்டைமான் முடிவாகவுள்ள எல்லாரும் அவரவர் கள் தேகமன உழைப்புக்களுக்கும் உரிமைகளுக்கும் தக்கபடி பங்கிடப்படவேண்டியதென்பதை ஓரவாரமின்றி நடுநிலை நின்று ஆராய்வார் எல்லாரும் ஒருமனமாக ஒப்புக்கொள்வார்

'1931-ம் வருஷத்திய (census) மக்கட்டொகைக்கணக்கின் படி இந்தியாவில் 100-க்கு 90 பேரும், இங்கிலாந்தில் 100-க்கு 6 பேரும், இரஷ்யாவில் 100-க்கு 2 பேரும், ஜர்மனியில் 100-க்கு ஒருவனும், ஜப்பானில் 100-க்கு 3 பேரும் படியாதவர்களென்று ஏற்படுகிறது'.*

ஒரு குடியானவன் தனக்குள்ள சாகுபடி நிலத்தில் நூற்றுக்குப் பத்துப் பங்கு மட்டும் பயிரிட்டு 90 பங்கு தரிசாகக் கிடக்கும்படி விட்டானுனல், அவன் குடித்தனத் திறமை எப்படி மதிப்பிடப்படுமோ, அப்படி மதிப்பிடப்படுதற்குரியதாயிருக்கின்றது இந்தியாவிலுள்ள மக்களுள் 100-க்குப் 10 பேரையே படிக்கவைத்திருக்கும் இந்திய அரசாங்கத்தின் துரைத்தனத் திறமை!

நூற்றுக்குத் தொண்ணூறுபேர் சொந்த மொழியையே படியாதிருக்கும்போது, அவர்களைத் தாய்மொழி கற்கும்படி எந்த முயற்சியுஞ் செய்யாமல், செய்தித் தாள்கள் கூறுவது உண்மையானுல், ஏறக்குறைய இரண்டாயிரம் பள்ளிக்கூடங்களை மூடி அதனோடு நில்லாமல், பள்ளிப்பிள்ளைகளை அன்னிய மொழியாகிய இந்தியைப் படிக்கச்செய்த (அதுவும் கட்டாயமாகப் படிக்கச்செய்த) மாஜி காங்கிரஸ் கவர்ன்மென்றின் துரைத்தன முறையை என்னென்பது!.

காங்கிரசுக்காரர், இந்தியாவுக்குப் பூரணசுயாதீனத்தை, பிரித்தானிய இராசாங்கத்தின் சம்மதத்தோடேயோ எதிர்ப்போடேயோ, உண்டாக்கிக் குடியரசை யேற்படுத்துவதாகக் கூறுகிறார்கள். பிரிட்டிஷார் இந்தியாவுக்குக் குடியேற்றநாட்டுப் பதவி யளிப்பதாக வாக்களித் திருக்கிறார்கள். குடியரசு ஏற்படச்செய்வார் யாராலும், அவர்கள் குடிகளை நூற்றுக்கு நூறு படித்தவர்களாகவும், அக்குடிகளுள்ளே "வீதியில் நடப்பவனும் கழனியில் காளை மேய்ப்பவனும் மலையில் தேன் அழிப்பவனும் கடலில் மீன்பிடிப்பவனும் சட்டசபை அங்கத்தினனாயிருப்பவனும் பள்ளியாசிரியனும் நீதி மன்றத்தில் நியாயத்தை யெடுத்துச் சொல்லும் வழக்கறிஞனும் அனைவரும் உலகவறிவு அரசியல் அறிவு சுகாதார அறிவு சமுதாய அறிவு பெற்றவர்கள்" ஆகவும், இந்தியதேசம் அன்னிய நாட்டார் படையெடுப்பாற் பாதிக்கப் படாதபடி குடிகளிற்போதுமானவர்களை இராணுவப் பயிற்சியுடைய வர்களாகவும் இப்போதே செய்யத் தொடங்கவேண்டும்; தொடங்கி, இவ்வளவு காலத்துக்

* செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 17, பக்கம் 322.

குள் இப்பயிற்சிகள் முற்றுப்பெறச் செய்யவேண்டுமென ஒரு காலத்திட்டம் உடனே ஏற்படுத்தி அத்திட்டம் நிறைவேறும் வழியில் உழைக்க வேண்டும்.

இதற்கு முதற்படியாகச் சென்னை யரசியலாரும் சமூகத் தொண்டர்களும் பொதுமக்களின் அறியாமையைப் போக்கக் கிராமத்துக்கொரு பகற் பள்ளிக்கூடமும், ஆங்காங்கு இராப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தவேண்டும். எழுத்தறிவியக்கம் பரவச் சேவைபுரிபவர்களுக்குங் கல்லாது மூத்தாருக்கும் ஒருங்கே தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டிருக்கும் '**தானே தமிழ் கற்குமுறை**' என்ற நூல் பெரிதும் உதவியா யிருக்கும் என்று நம்புகிறேன்.

கட்டாய இந்திப் பாடம்

சென்னை இறையாட்சியாளர் அறிவிப்பு

கட்டாய இந்திமுறையால் மக்களிற் பெரும்பகுதியினரிடையே எதிர்ப்பும் கொதிப்பும் ஏற்பட்டிருந்ததென்பதை இறையாட்சியாளர் நன்குணர்ந்துள்ளனர்; முதல் மூன்று 'பாரங்'களில் மட்டும் தேர்வு என்பதின்றி இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கற்றுக்கொடுப்பதால் மாணவர்கள் அம்மொழியை நன்கனம் கற்றுக்கொள்ள முடியாதென்றே கருதுகின்றனர்.

ஆனால் இந்தியை விருப்பப் பாடமாகமட்டும் வைப்பதோடன்றி மேல் 4, 5, 6-ஆம் 'பார'ங்களிலும் அதை விருப்பப் பாடமாக்கித் தேர்வும் நடத்துதல் வேண்டுமென்று இறையாட்சியாளர் கருதுகின்றனர். சென்னை மண்டிலத்தினருக்கு இம்மொழி தெரிந்திருப்பது இந்திமொழி வழங்கும் பிற பகுதிகளிலுள்ளவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள மிகவும் பயன்படுமென்றும் கருதுகின்றனர்.

இப்போது இந்தி கட்டாயப் பாடமாக அமைந்துள்ள இடங்களில் அதனை விருப்பப் பாடமாக மாற்றும் கட்டளைகள் உடனே பிறப்பிக்கப்படும்.

அடாஅது அட்ட அமுதம்!

[வித்துவான் அன்பு. கணபதி]

அடாஅது—சமைக்காது, அமுதினை அட—ஆக்க இயலுங்கொல்? இயலும்; சமைத்தாள் ஒருத்தி என்று கூறுகின்றான் ஒருவன். அத்தகைய ஆற்றல் பெற்றவள் எவ்வூரினள்? எவ்வாறு சமைத்தாள்? எவ்வடுப்பிற் சமைத்தாள்? எனப் பல ஐயங்கள் நமக்குத் தோன்றுகின்றன அல்லவா? இவைகட்கு இதோ விடை யிறுக்கின்றான் தலைவன்: அவள் ஆரூரில் வதிபவள். எத்தகைய ஆரூர் அது? கங்கையைச் சடையிற் கரந்தவன்—குருதி ஒழுகவொழுகப் பொருகளிற்றினை உரித்தவன்—பூதங்கட்கெல்லாம் தலைவன்—ஆதிமூர்த்தி—மலைமகட்குத் தனது உடலில் ஒரு பாதியை உவந்து அளித்தவன் ஆகிய கண்ணுதற் கடவுள் கோயில் கொண்டுள்ள திருவாரூர்.

ஒருநாள் பகல்நேரம். வலம்புரி என்ற சங்கினை அடுப்பாக அமைத்தாள். சலஞ்சலம் என்னும் பிறிதொரு வகைச் சங்கினைப் பாத்திரமாக அவ்வடுப்பின்மீது ஏற்றினாள். சிறந்த வெண்முத்துக்களை அரிசியாக உலையிலிட்டாள். செம்பவளங்களை அடுப்பிலிட்டுத் தீயை மூட்டினாள்! அனல் தாங்காது சோறு அடியிற் பிடித்துவிடுமே! எனவே, சிப்பியைத் துடுப்பாகக்கொண்டு ஒப்பத் துழாவினாள். அமுதம் சமைந்துவிட்டது!

இனி உண்ணவேண்டியதுதானே பாக்கி! தனது தோழிகளையெல்லாம் அன்புடன் அழைத்தாள்; வரிசையாக உட்கார வைத்தாள். தலைக்குக் கொஞ்சமாக அமுதத்தை எடுத்துக் இட்டாள். தானும் சிறிது எடுத்துக்கொண்டாள். அனைவரும் மகிழ்ச்சியுடன் வாய்மடுத்து உண்ணுகின்றார்கள்.

இந்நிலையில் மேலே கூறிய நம் தலைவன் அவ்விடத்தில் தோன்றினான். அம்மகளிர் குழுவை அண்மித் தலைவியை நோக்கினான். "திருந்திய இழையினையும், பணைத்த தோளினையும், தேன்போன்ற மொழியினையும் உடைய பெண்ணே! நான் இவ்வூருக்குப் புதியவன்! உங்கள் விருந்தினனாய் வந்துள்ளேன். பசி பொறுக்க முடியவில்லை. நீங்கள் உண்ணும் அமுதில் எனக்குச் சிறிது தருவீர்களா?" என்று இயம்பினான். மறுமொழி ஒன்றும் கிடைத்ததாகத் தெரியவில்லை. பேச்சு அத்துடன் நின்றுவிட்டது. தலைவியை ஏற இறங்கப்

பார்த்தான்; கொங்கை முகத்தை நோக்கினான்; முறுவலித்தான்—புன்னகை பூத்தான்; இறைஞ்சினான்.

அவ்வளவுதான் அவனுடைய உள்ளத்திற் புகுந்துவிட்டாளாம்—உள்ளத்தில் மட்டுமல்ல. நிறைந்த நீரில் ஒரு துளி எண்ணெய் விழுந்தால் அஃது எவ்வாறு நீரெங்கும் பரவி விடுமோ அதேபோல அவனுடைய அங்கமெல்லாம்—உடலெல்லாம் தானாய் விட்டாளாம். அவள் புகுந்துகொண்டாளாம்! மலைமகட்கு அவர் தனது உடலில் ஒரு கூறு கொடுத்தார். இவன் தன்னுடைய உடல் முழுவதையும் அவளுக்கே—தலைவிக்கே அளித்துவிட்டான். ஆனால் பாவம், அடாஅது அட்ட அமுதம் அவனுக்குக் கிடைக்கவில்லை! இனியும் கிடைக்குமா? யார் கண்டார்கள்? இந்நிகழ்ச்சிகளே,

உலாநீர்க் கங்கை ஒருசடைக் கரந்து
புலால்நீ ரொழுகப் பொருகளி றுரித்த
பூத நாதன் ஆதி மூர்த்தி
திருமட மலைமகட்(கு) ஒருகூறு கொடுத்துத்தன்
அன்பின் அமைத்தவன் ஆரூர் நன்பகல்
வலம்புரி அடுப்பா மாமுத் தரிசி
சலஞ்சல நிறைய ஏற்றி நலந்திகழ்
பவளச் செந்தீ மூட்டிப் பொலம்பட
இப்பியம் துடுப்பால் ஒப்பத் துழாவி
அடாஅ(து) அட்ட அமுதம் வாய்மடுத்
திடாஅ ஆயமோ(டு) உண்ணும் பொழுதில்
திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே!
விருந்தினன் அடியேற்கு அருளுதியோவென
முலைமுக நோக்கி முறுவலித்(து) இறைஞ்சலின்
நறைகமழ் எண்ணெய்ச் சிறுநுண் துள்ளி
பொங்கு புனல் உற்றது போலஎன்
அங்க மெல்லாம் தானா யினளே.”

என்ற செய்யுளாகப் பின்னொரு காலத்து அத்தலைவன் வாயினின்று வெளிவருகின்றது.

தமிழிலக்கியமும் மதிப்பீடும்

An Essay on Tamil Literary Criticism

[வித்துவான் ஆ. கிருட்டிணமூர்த்தி, ஐயம்பேட்டை]

ஒரு பொருளை விலைகூறுவோனுக்கும் அதனை வாங்குவோனுக்கும் இடையில், அப்பொருளை இருவர்க்குமன்றி நடுவுநிலையாக அளந்துகாட்டுங் கருவி துலாக்கோல். அவ்வளவைக்கேற்ற மதிப்பை அப்பொருள் பெறுகின்றது. அது போல ஒரு நூலின் மதிப்பையறியவேண்டின், அதனுட்கூறிய பொருளைக் கற்போன் தன்னுடைய அறிவினால் அளக்கவேண்டியவனாகின்றான். அஃதாவது, அந்நூலுக்கும் அதனைக் கற்போனுக்கும் இடையில் அறிவு அளவுகருவியாக இருக்கின்றது. இங்ஙனம் நூல்களை அளக்கும் முறையை ஆங்கிலத்தில் 'criticism' என்பர். அதனைத் தமிழில் 'மதிப்பீடு' என்போம். இம்மதிப்பீட்டுமுறை ஆங்கில நாட்டில் பதினைந்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு தலைதூக்கத் தொடங்கிற்று. அது வளர்ந்த வளர்ச்சியின் விரைவு இன்று அதன் உச்சநிலையை அடைந்திருக்கின்றது. ஆனால் தமிழ்நாட்டில் அதனின் பல நூற்றாண்டுகள் முன்பாகவே அம்முறை தொடங்கி வளர்ந்தது. எனினும், அது நன்கு செப்பம் பெறவில்லை. தமிழில் உள்ள பலவேறு குறைகளில் விரைவில் அரிது முயலாமல் நிறைவுசெய்யக்கூடியன சில உண்டு. அவற்றுள் இம்மதிப்பீட்டு முறையும் ஒன்று.

இனி, இற்றைக்கு இரண்டாயிரமாண்டிற்கு முற்பட்ட கடைச்சங்ககாலத்தில் செய்யுட்கள் அரங்கேற்றப்படும் வழக்கு இருந்து வந்தது. செய்யுட்களைத் துருவியாராய்ந்து அவற்றின் சொற்செறிவு, பொருட்செறிவுகளை நல்லிசைப் புலவர்கள் மதிப்பிட்டனர். அத்திட்பநுட்பங்களுக்கேற்பப் புலவர்கள் மதிக்கப்பட்டனர். மதிக்கப்பட்டாரனைவரும் சங்கப்புலவராய் வீற்றிருந்தனர். அக்காட்சி நினைக்கவும் கேட்கவும் இனிமை தந்தது. நக்கீரர் அக்காட்சிக்கோர் புகலிடமாய் விளங்கினார்.

நூல்களெல்லாம் அறிவென்னும் செம்பொன்னால் செய்யப்பட்டன; இயற்கையாகிய உரையாணியால் ஒளிவீசப் பெற்றன. அதன் மாற்றைக் காணுதற்கு உரைகல் வேண்டினர். அதற்கு நுண்ணறிவைப் பயன்படுத்தினர் சங்கப் புலவர்கள். பாடுவதில் துறைபோகிய பண்பினர் பாலை பாடிய பெருங்கடுங்கோ வென்றும், மருதனிளநாகன் என்றும்

இங்ஙனம் மற்றும் பலரும் பல்லாற்றான் சிறப்பிக்கப்பட்டனர். ‘பொய்யாநாவிற் கபிலன்’ என்றும், ‘பரணன் பாடினன் மற்கொல்’ என்றும், ‘அந்துவன் பாடிய சந்துகெழுநெடுவரை’ என்றும் வாயார வாழ்த்தப்பட்டவர்களு முண்டு. இவற்றிற் கெல்லாம் காரணம் இவர்தம் அருமைச் செய்யுட்களின் மாற்றும், மதிப்பும் விலையறியப்படாமல் இருந்தமையல்லால் வேறொன்றில்லை.

இங்ஙனமன்றிச் சொல்லும் பொருளும் சோர்வுபட்ட பாடல்கள் மிகநுணுகி யாயப்பட்டன. அத்தகைய நூல்கள் அங்கு இடம்பெறாது போயின. இவற்றால் விளைந்த கதைகள் பலவாயினும் முதன்மை யானவை மூன்று: முதலாவது, சோர்வுள்ள பாடல்களைக் கண்டு, தன் தலையில் குத்திக்கொண்டதால் தலையில் சீழ்வடியத் தொடங்கியது; அதனால் ஒருவர் சீத்தலைச்சாத்தனார் எனப் பெயர்பெற்றார் என்பது. இரண்டாவது, இறைவனால் சங்கத்திற்கு ஒருபலகை யளிக்கப்பட்டது. புதுவதாகச் சங்கத்தின் பார்வைக்குவந்த நூல்களை அதன் மீது வைப்பது வழக்கம்; சிறந்த நூலாயின் அது விரிந்து இடங் கொடுக்கும்; அல்லாத நூல்களைச் சுருங்கிக் கீழே வீழ்த்திவிடும் என்பது. இனி, மூன்றாவது இறையனார் நூலுக்குப் புலவர் பலர் பொருள்கண்டனர். தத்தம் உரையே சிறந்தது என்று ஒருவரோ டொருவர் மாறுகொண்டனர்; இறைவன்பால் முறையிட்டனர். அவரால் அருளப்பட்ட ஒரு மூங்கைப் பிள்ளையிடம் அவராணைப்படி, தத்தம் உரையைப் படித்துக் காட்டினர். அப்பிள்ளை நூலின் உரை சிறந்தவிடத்திலெல்லாம் மெய்ம்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் சொரிந்தது; அல்லாதஇடத்தில் வாளா இருந்தது....என்பது. இம் மூன்றும் இவை போல்வன பிறவும் உண்மையில் நடந்திருக்குமா என்பது பெரிதும் ஐயத்திற்கு இடம்; அவ்வையத்தில் பெரும்பகுதி எனக்கும் உடன்பாடு. ஆனால் எஞ்சிய பகுதியில் ஓர் உண்மைஉண்டு. அது தான்,“ நூல்களை அக்காலத்தில் திடுமென எடுத்தளடுப்பில் ஒப்புக்கொள்ளும் பழக்கமில்லை; அவற்றை நுணுகியாய்ந்தனர்; சில சிறந்தனவாயின; சிறவாதவற்றை வெறுத்துத் தள்ளினர்; இதனால் நாளடைவில் பூசல் விளைந்தது; எனவே, நெறிமுறை கடந்தனர்; இறைவன்பால் வழக்கு வேண்டினர்; பிறகு கண்ட முடிபு தெய்வ முடிபாகக் கொள்ளப்பட்டது; எனவே புலவர்களுக்குள் ஊக்கங் குன்றி, ஒற்றுமை குலையத் தலைப்பட்டது ” என்பது. இவ்வுண்மையான அடிப்படை ஒன்றில்தான் தெய்வக் கற்பனைகளால் நூல்களை மதிப்பட்டனர் எனக் கதை கட்டலாயினர்.

நூல்களை மதிப்பிடுங்கால் தம்முளத்திற்பட்டதை ஒளியாமல்—நடுங்காமல்—உறுதியுடன் சிலர் உரைத்துவந்தனர். அதனால் முற்கூறிய தெய்வமுடிபாயினும் அதற்கு அஞ்சினாரில்லை. எடுத்துக்காட்டாக நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்றார் நக்கீரர். இக்கதையை அனைவரும் அறிவர். அக் கதையில் கூறப்பட்டது சொற் குற்றமல்ல; ஆனால் பொருட்குற்றம். இதனால் ஒரு நூலை அடியுடன் இகழாமல் அதன் நற்பகுதியைப் போற்றியும், அல்லாத பகுதியில் தாம் கருதிய குற்றத்தை வெளிப்படுத்தியும் தமது அறிவுத்திருவினை ஆண்மையுடன் ஆண்டவராயினர். இஃதொன்றுதான் மதிப்பீட்டு முறையின் (Method of Criticism) அடிவேர் என்பதை அனைவரும் உளங்கொளல் வேண்டும்.

இங்ஙனமன்றிப் பொறாமையால் - பெருமிதத்தால்-புறக்கணிப்பால்-தன்வேட்கையால் பேரறிஞர்களின் கருவூலமாகிய பெருநூல்களையும் நாளடைவில் இகழத்தொடங்கினர். அறவே தமது அறிவுமதுகையைக் கெடுத்துக் கொண்டனர். கடைச் சங்கத்தின் வளர்ச்சிக்கும் நல்லாசிரியர்கள் தோன்றுதற்கும், அரிய நூல்கள் வெளிப்படுதற்கும் இப்பண்பு மாறுதலே கேட்டினைத் தரலாயிற்று. வள்ளுவனாரின் குறள் இக்கும்பலுள் அகப்பட்டு மீண்டதை அறியாத புலவர்கள் இல்லை. அக்கதை கிடந்த அமைப்பில் முழுவதும் நம்புதற்கில்லை. எனினும், புறக்கணிப்பும் பொறாமையும் அக்காலமுதல் இந்நாட்டில் தலைகாட்டலாயின. எனவே, நாளடைவில் உண்மையான மதிப்பீட்டு முறையில் மாசுபடியத் தொடங்கிற்று.

அதன் பின்னர் சமயச்சார்பான நூல்களும், அவற்றிற்கு மதிப்புரைகளும் தோன்றலாயின. இவற்றுள் ஒரு சமயத்தை மற்றொன்று ஏசுவதும், ஒழித்துவிட முனைவதுமாக மாற்றங்கள் பல தோன்றின. அதனால் அவையெல்லாம் மறுப்புரைகளாயினவன்றி நடுநின்று ஆராயும் மதிப்புரைகளாகப் பெயரெடுக்கவில்லை. கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவையார் முதலியோர் ஒருவர் நூலுக்கு அல்லது புலமைக்குச் செம்மையான மதிப்புரைகூற மனங்கொள்ளவில்லை. மாறாகத் தம்முள் கலாய்த்துக் கிடந்தனர். இவையெல்லாம் இடைக் காலத்திலாகும். இதனை வளர்ப்பதில் வல்லவராயினர் சிலர்; அவர் வில்லியாரும் காளமேகமும் போல்வார். இவர் பிற்காலத்தவரென்க.

இவர்கட்கு முன்னும்பின்னும் உரையாசிரியர் பலர் தோன்றினர். அவர்கள் புறக்கணிப்பு, பொறாமை முதலிய

வற்றைக் கைக்கொண்டனரேனும் மதிப்பீட்டுமுறையில் பெரி தும் தலைசிறந்துநின்றனர். அவர்களால் மதிப்பீட்டுக் கோட்பாடுகள் (Principles of Criticism) நன்கு புலனாயின; தத்தம் கருத்துக்களைக் கற்போர்க்கு அறிவாக மாற்றியளித்த னர்; பலவேறு கருத்துக்களில் துணிவான கருத்துக்களைத் தேர்ந்தறியும் முறைகளைக் காட்டிவிட்டனர். இதனால் பல நுட்பமான செய்திகள் வெளிப்படலாயின.

கருத்துகளைச் செய்யுள் வடிவிலோ உரைநடையிலோ புலப்படுத்திக் காட்டலாமாயினும், உரைநடையில்தான் அவை நன்கு தெளிவாகும் என்பது உரையாசிரியர்களின் உரை யாலன்று, மற்று, மதிப்புரைகளால் (criticisms) தெரிய வந்தது. தமிழ்மொழியின் சொல்வளமும் பொருளாழமும் மதிப்புரைகளால்தான் வெளிப்பட்டன. தமிழ் உரைநடை நச்சினார்க்கினியர் காலத்தில் சிறந்து வளரத்தொடங்கிற்று. ஒருவனுடைய கலையறிவும், உலகியலும் மதிப்புரை வழங்கு வதில் புலனாயின. மதிப்பீடு செய்தற்கு நூலறிவினும் நுண்ணறிவு வேண்டும். அஃது உலகியலறிவோடு ஒன்றுபட வேண்டும்; அவ்வுரையை நடுநிலையுடன் ஆய்ந்து நன்முடிபு கூறுதல் ஒரு சிறுதொழிலன்று; பேரறிவினார்க்கே அஃது கைவரும் என்பன உறுதிப்பட்டன. சுருங்கக் கூறின், மதிப் பீட்டுத்துறையின் அருமை பெருமைகள் செழிப்புற்றன என்க.

இனி, தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஆசிரியர் இளம்பூரணரே முதல்வராகலின், அவர் பிறருடைய கருத்துக் களை எடுத்துத் தேருதற்கு இடமில்லை. இருப்பினும் ஒரோ வழிச் சிலகூறிச் செல்லுகின்றனர். உரையாசிரியர்கள் பல திறக்கருத்துக்கள் தோன்றிய பின்னர், அவற்றுள் ஒவ்வொன் றையும் எடுத்துக்கூறித் தாம் கூறிய கருத்தோடு ஒப்பிட்டு ஒன்றற் கொன்று பெற்றுள்ள ஏற்றிழிவுகளை ஆங்காங்கு தெளி வித்துச் செல்வாரயினர். இம்முறை, இறையனார் களவியல் உரையிலேயே இடம் பெற்றுவிட்டது.

ஆசிரியர் பேராசிரியர் மற்றையாசிரியர்களின் உரையை மிகுதியாக எடுத்துக் காட்டி, மதிப்பிடாமல் ஆங்காங்குச் சில சில கூறிச்செல்கின்றனர். தாம் மதிப்பிடுமிடத்தில் ஒரு கருத் துப் பொருந்தாது போயின், "இவற்றை வேறு உருவகமென் றும் பிறர் மயங்குப" (தொல்-பொருள்-284-உரை) என்பது போல மிக அழகாகக் கூறிச்செல்வர். ஆசிரியர் பரிமேலழகர் பிறர் உரையை மதிப்பிட்டுத் தமது உரையுடன் ஒப்பாக இருக்குமாயின், 'இங்ஙனம் கூறுவாருமுளர்' என்று குறித்துச்

செல்வார். பொருந்தாதவிடங் காணின், இன்னின்ன காரணத்தால் இஃது பொருந்தாது என்று கூறிப் பின்னர், "ஆதலின் உரையன்மை யறிக" என்பதுபோல் நயமானமுறையில் மதிப்பீடு செய்வர். "அது அவ்வாறு நில்லாமையு மறிந்திலர்" என இகழ்ந்துங் கூறுவர் (குறள்-636) ஆசிரியர் சேனாவரையர் 'ஆசிரியர்க்கது கருத்தன்றென்க' எனப் பணிவுகாட்டி மறுப்பதும், தருக்கமுறை யொட்டிக் காரணங் காட்டுவதும் அவரது திட்பமும் விரிவுங்கொண்ட நல்லறிவைக் காட்டும். பிறருடைய கருத்துக்களின் மதிப்பை அளவிடுங்கால், அக்கருத்துக்குரிய ஆசிரியர் பெயரை எடுத்துக்கூறி, இன்னார் இன்னவாறு கூறினார் என்று வரைவதும், வரையாமையுமாகிய இரு வழக்கும் தமிழ் உரைகளில் காணப்படுகின்றன. பெயர் கூறாது கூற்றினை மட்டில் ஆராயும் பான்மை அனைவரிடத்திலுங் காணப்படினும், பெயர் கூறி அவர் கூற்றைச் சீர்தூக்குவது ஆசிரியர் நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர் முதலிய சிலரிடத்தில் பெருவழக்காகும்.

பிறர் கருத்தை எவ்வாற்றானும் அசைத்துவிட்டுத் தங் கருத்தைக் கொண்டுவந்து நாட்டுவதில் ஆசிரியர் சிவஞான முனிவரே முதனின்றவர். அடுத்தபடியாக வருவார் நச்சினார்க்கினியர். முற்கால உரையாசிரியர்களுள் கருத்துக்களைச் சீர்தூக்கும் மதிப்பாளரில் (critics) நச்சினார்க்கினியர் தலையாசிரியர்; பிற்காலத்தவருள் ஆசிரியர் சிவஞான முனிவராவார். காலத்தால் இங்ஙனமாயினும், மதிப்பாளர் உலகிலேயே உச்சத்தையடைந்தவர் இவர் ஒருவரே. வடநூல் வழக்குகளையும் தமிழ் உரைகளில் துணையாகக்கொண்ட உரையாசிரியர்களில், நச்சர், பரிமேலழகர், சேனாவரையர் முதலியோர் முதற்பகுதியினர். வடநூலார் கருத்துக்களை எடுத்தாண்டும், எடுத்தாளப்பட்ட உரைகளை மதிப்பிட்டும், அவற்றின் ஏற்றிழிவுகளைத் திட்பநுட்பஞ்சான்ற அருஞ்சொற்களால் வெளியிட்ட பெருமை ஆசிரியர் சிவஞானமுனிவர்க்கேயுரியதாகும்.

தமிழ்மொழியின் இலக்கணமும் வடவிலக்கணமும் ஒன்றென்று கூறித் தடுமாறிய ஈசானதேசிகர், புத்தமித்திரனார் முதலான சிலருடைய கூற்றுக்களின் முனை மழுங்குமாறு தம் கணைகளை வீசியவர் சிவஞானமுனிவர். அவரும் சேனாவரையரும் 'அது போலியுரை யென்க', 'அதுபோலியுரையாதலறிக' என்றும் பலகால் கூறிச் செல்வது அவர்தம் நடைத்திறம்.

இனி, பிற்காலத்தில் 'அறியாது கரைந்தார்', 'அவர்கூற்று சரிந்து விழுந்தது', 'அது எள்ளி நகையாடற்பாற்று' என்பன போன்ற சுடுசொற்களால் தமது முடிபு கூறி, ஏனையர் கருத்துக்களை அளவிடுகின்ற முறை வந்தது. இன்னும் 'மாட்டேற்றிலக்கணமறியார்', 'இப்பெற்றியறியாத வுரையாசிரியர்', 'பிடி முதலிய வழக்குகளையு மறந்தார்போலும்', 'பழுதுபடக் கூறினார்', 'அறிந்திலர் போலும்' 'முன்னொடுபின் மயங்கக் கூறுதல் அவரியல் பென்க' என்பன போல்வன முன்போந்த சுடுசொற்களைத் தோற்றி வளர்த்த கூற்றுக்களாம். இதற்குப் பொறுப்பாளியாவர் சிவஞானமுனிவரே. அவர் ஒரு நூலைச் சூறுவளியிலேயே பறக்கவிட்டுவிட்டார்.

இத்தகைய முனிவர் ஆசிரியர் சேனாவரையர் உரையைப் புகழ்ந்து கூறும் ஓரிடம் ஈண்டுக் கருதற்பாலது. அஃது "வடநூற்கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர், எழுத்ததிகாரத்திற் குரை செய்தாராயின், இன்னோரன்ன பொருளனைத்துந் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந் துரைப்பார். அவர் சொல்லதிகாரம்போலப் பெரும்பயன் படாமைகருதி எழுத்திற்குரை செய்யா தொழிந்தமையின், தமிழ்நூலொன்றே வல்லவுரையாசிரியரா யுள்ளோருரையை ஆசிரியர் கருத்தாகக் கொண்டு பின்னுள்ளோரு மயங்குவாராயினர்" என்பது.

சங்கரநமச்சிவாயர், சேனாவரையர், பரிமேலழகர் முதலியோர் கூற்றுக்களைப் பெயர் கூறாமலே மதிப்பிட்டுக் காரணங் காட்டி ஒதுக்கிப் பின் தம் கருத்தை நாட்டிச் சென்றிருக்கின்றார். இவர் உரையின் சிலபகுதியைத் திருத்தியும், புதுக்கியும் சிவஞானமுனிவர் தமது நன்னூல் உரையைச் செய்துபோயினார். "பல்கலைக்குரிசில் பவணந்தி யென்னும் புலவர் பெருமான்" என நூலாசிரியரை உரைகாரர் மதிப்பிட்டுக் கூறினார். இங்ஙனம் கூறியவருள் இளம்பூரணர், சங்கர நமச்சிவாயர் முதலியோர் முதல் வந்தவர். இனி இராமாயண முதலான பெருங்காவியங்கள் அறமுதனான்கும் பயப்பவை என்றார் ஒருசாரார். அறமுதனான்கும் பயக்கும்பெருநூலையே தொல்காப்பியனார் செய்தார் என்றார் நச்சினார்க்கினியர். இவற்றையெல்லாம் ஒருகூறாகத் திரட்டி இராமன் கதையும் சங்கநூல்களும் ஆகியவற்றை ஒரு பொருளாக எண்ணியும் வாணாள் வீணாள் கழிப்பர் என்றார் ஈசானதேசிகர். இங்ஙனம், ஒருவருடைய துலாக்கோலில் அடியிற் கனத்துநின்ற தட்டு மற்றொருவர்கையில் மேலே ஊசலாடுகின்றது. கருத்து வேற்றுமை இருப்பது இயற்கையாயினும் சில நூற்

ாண்டுகளுக்குள் இத்தகை மாறுபாடுகள் சிற்சில விருப்பு வெறுப்புகளாலும் ஏற்படுவதுண்டு. இதற்குத்தான் ஒரு பாற் கோடாமை வேண்டும்; அது வாய்ப்பதுதான் அரிது என்று முன்புங் கூறினோம்; இதன் வாயிலாக இங்கும் அறி கின்றோம்.

உரையாசிரியர் மதிப்பீடும், உரைநடையும் இங்ஙனமாக, இந்நூற்றாண்டில் நூல்களை மதிப்பிடும் முறை மிகவும் முன்னேறி வளர்ந்து வருகின்றது. இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் முதன்முதல் தமது கருத்தை, மதிப்புரையை, முன்வந்து கூறத் துணிந்தவர் மறைமலையடிகளாவார். அவர் நடையும், மறுக்குமுறையும், அதன் பொருளும் பின்னர் பலராலும் கையாளப் பட்டன. ஆனால் சுடு சொற்களால் உளத்திற் றைக்கு மாறு மதிப்புரையளிக்கும் வன்மையை அன்னவரிடத்தில் காணக்கூடும். ஆசிரியர் சிவஞானமுனிவருக்குப் பின்னர் வந்த மதிப்பாளருள் (critics) இன்றுகாறும் அம்முனிவருக்கு அடுத்தாற்போல் வைத்துக் கருதற்குரியவர் அவரன்றிப் பிறிதொருவரைக் கூறுதற்கு இல்லை.

தற்காலத்தில் மொழிப் பூசலும், வகுப்புப்பூசலும் மிகுந்து போனமையின், நூல்களை ஆராய்ந்து முடிவு காணுதலும் அவ் வழியிலேயே செல்கின்றது. தற்காலத்தில் நாளுக்குநாள் இங் ஙனம் நூல்களை மதிப்பிடும் முறை வளர்ந்து வருகின்றது. சிறந்த மதிப்பாளர் பலர் திட்பநுட்பஞ் சான்ற முறையில் நூல் களை மதிப்பிடவேண்டும். இல்லையேல், பொய்யும் வழுவும் நிறைந்த நூல்கள் பெருகிப் பெருங்கேடு விளைக்கும்.

பண்டைநாளில் புதுநூல்களைப் புலவர்கள் கூடியகூட் டத்தில் கொணர்ந்து, அவற்றின் ஆசிரியர், படிப்பதும் அதற் குரை காணுமிடத்தில் புலவர்கள் கடாவுதலும், அதற்கு ஆசிரி யர்கள் விடைதருதலும் போலப் பலநிகழ்ச்சிகள் நிகழும். பின் னர்தான், அந்நூல்கள் சிறந்தன என்று பலராலும் ஒப்புக் கொள்ளப்படும். இங்ஙனம் மதிப்புரைகளால் வடிகட்டிவந்த நூல்கள்தாம் பிற்காலத்தில் நெடிதுநின்று விளங்கின. அல் லாத பிறவற்றில் பலவும் அழிந்துபட்டன. தொல்காப்பியம் பாண்டியன் அவைக்களத்தில் அதங்கோட்டாசான் முன் னிலையில் அரங்கேற்றப் பட்டதாக அதன் பாயிரம் கூறுகின்றது. இன்றும் பலநூல்கள் அங்ஙனம் அரங்கேறும் அவைக்களங் களைக் காணுகின்றோம். எனவே, அன்றுமுதல் இன்றுவரை, தமிழ்நாட்டில் நூல்களை மதிப்பீடுமுறை இருந்திருக்கின்றது. எனினும் உண்மையைநோக்கும்பொழுது அம்முறை செப்பஞ் செய்யப்படாமல் தாறுமாறான முறைகளில்தான் நடந்தேறி

வருவதாகத் தெரிகின்றது சிலபொழுதில் அது தகாதவழிகளி லும் சென்றுவிடுகின்றது. அவ்வழி மறைந்து அது நன்னெறிப் படல் வேண்டும்.

ஓவிய நூல், கணு நூல், களவு நூல், அடுவை நூல் முதலாகப் பலதிறக் கலைநூல்கள் பண்டைநாளில் விளங்கியதாக நன்கு அறியக் கிடக்கின்றது. இன்னும் நூல்வகைகளில் ஒரு நூலை மறுத்து எழுதும் வேறொரு நூலுக்கு, 'எதிர் நூல்' என்று ஒரு பெயர் உண்டு. அதாவது, ஒன்றுக்கு மறுப்பாக எழுதப் பட்ட நூல் என்பது பொருள். ஆனால் அதனினும் சிறிது வேறுபட்ட மதிப்புநூல் (Treatise on Criticism) ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை. ஆதலின், அறிஞர்கள் அம் முறையில் நூல்களை வரைவது மிக இன்றியமையாததென்று நான் கருதுகின்றேன்.

நாலுவருஷம் மூன்றுமாதம் தூங்கிய குழந்தை

அமெரிக்காவில் 'எரிலன்ஸ்' என்ற ஊரில் ரோஸ்டிட்டி என்ற குழந்தை ஒருநாள் ஜுரம், உடம்பு வலி என்று படுத்தது: அப்பொழுது அதற்கு வயது 2. உடனே தூங்க ஆரம்பித்தது எழுந்திருக்கவே இல்லை. தாய் 'ஸ்டமக் ட்யூப்' மூலம் ஆகாரம் கொடுத்து வந்தாள்; தினம் ஸ்நானம் செய்வித்தும் வந்தாள். குழந்தை மிகவும் மெலிந்து கொண்டே வந்தது. நான்கு வருஷம் மூன்று மாதம் அப்படியே நித்திரையிலிருந்தது. பின் சமீபத்தில் விழித்தெழுந்துவிட்டது. இந்த விசித்திர வியாதியைப்பற்றி வைத்தியர்கள் மேலும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அவர்களுக்கும் ஒன்றும் புலப்படவில்லை.

— 'நியூயார்க் டைம்ஸ்'

முசுகுந்தச் சோழன்

[வித்துவான் கி. சாமிக்கண்ணு முதலியார்]

தோற்றுவாய்:—சோழநாட்டை ஆண்டுவந்த சோழர் குடியைச் சேர்ந்தவன் முசுகுந்தச்சோழன். இவன் சோழர்குடியின் இண்டாவது மன்னனாவான். இவன் முறைகண்டசோழனுக்கு மகன். இவனுக்கு வழங்கும் மறுபெயர் இக்குவாகு, ககுத்தன், புரந்தரனை வாகனமாகக்கொண்டு தானவரை வென்றவன், புலியும் மானும் ஒரு துறையில் நீருண்ண அரசுபுரிந்தவன் என்பன. வீரவாகு தேவருக்குப் புட்பகந்தியென்னும் அரசர்குடிப்பாவையிடம் பிறந்த பெண்ணாகிய சித்திரவல்லியென்பவளே இவனது மனைவி. இவனுக்குச் சிபி என ஒரு மகன் உண்டு.

இறைமாட்சி :—ஒருவர்க்குரிய உரிமையை ஏனையோர் கைக்கொள்ளாவண்ணம் பாதுகாத்தற்பொருட்டு நகரமக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பெருமக்களும், திருநெறித்தொடர்பான காரியங்களை நிறைவேற்றும் ஆசிரியர்களாகிய பார்ப்பாரும், அரசனும் குடிகளுமாகிய இவர்களின் உடல்நலத்திற்கேற்றவைகளையெல்லாம் உற்றுநோக்கும் மருத்துவரும், நன்னாள் குறித்தலும் தெய்வத்தாலாவது மக்களாலாவது பின்னே நிகழும் தீமைகளை உற்பாதத்தால் முன்னறிந்து காத்தலும் செய்யும் நிமித்தரும், அரசிறைப்பொருளின் வரவு செலவுகளைக் கவனிப்போரும் அரசற்குறுதி சூழ்வோரும் மன்றத்திருந்து நீதிசெலுத்துவோருமாகிய அமைச்சரும், ஆகிய ஐம்பெருங்குழுவினரின், சூழ்ச்சித் துணைகொண்டு ஆய்ந்து முடிவு கண்ட அரசியல் காரியங்களை எண்பேராயங்களின் துணையால் நிறைவேற்றிவந்தான். இவன் கருவூரில் அநேக மாடவீதிகளைக் கட்டினான். இவன்றன் படைத்தலைவர் வீரவாகுதேவர் என்பவர். இவன் வீரவாகுதேவரையும் தனது படை வீரர்களையும் கருவூரின்கண் குடியேற்றினான். அறப்புறக்காவலும் நாடுகாவலும் செவ்வனே நடைபெறுமாறு தனது நாட்டின் பல இடங்களில், குந்தம், வாள், வில், தேர், பரி, களிறு என்னும் அறுவகைத்தானைகளையும் அமைத்தான். உணவு, ஆடை ஆகியவற்றைப் பாசறைக்கண் கொண்டுபோதற்கேற்ற பல்லாயிரக் கணக்கான வீரர்களை வைத்திருந்தான். இவன் தனது படைத்தலைவர்களுக்கு உடையார் என்ற பட்டம் வழங்கினான். ஓதல், பொருதல், புரத்தல், வேட்டல், படையயிறலின் வல்லுநராகிய பலருக்கு வளங்கள் மிகுந்த நாடுகளையும் அந்நாடுகளின்

உரிமைகளையும் கொடி, குடை, முதலிய வரிசைகளையும் வழங்கி அவர்களைத் தனக்குட்பட்ட இளங்கோக்களாக வாழச் செய்தான். இம்மன்னர் பெருமான் தன்னாட்டில் வேளாண்மை பெருகி விவசாயம் விருத்தியடையச் செய்தான். பொருட் பரிமாறும் வாணிபத் தொழிற்றுறைகளிற் கற்றுத்தேர்ச்சியடைந்து சிறப்புறவிளங்கிய வணிகர் பெருமக்கள் ஆந்திரம், கலிங்கம், குந்தளம் முதலிய உள்நாடுகளுக்குத் தரைவழியே யானை, குதிரை, ஒட்டகம், எருது, சகடங்கள் வாயிலாகவும், சிங்களம், சாவகம், சோனகம் முதலிய வெளிநாடுகளுக்குக் கடல்வழியே மரக்கலம், தோணி, நாவாய், படகு, தெப்பங்கள் மூலமாகவும் சென்று பண்டமாற்றல் செய்து தமது நாட்டில் பல்வளங்களும் பல்குமாறு செய்ததற்கு இவ்வளவர் கோன் வசதிகள் செய்துகொடுத்தான்.

கல்வி நிலை :—இவ்வளவன் தனது துரைத்தன அலுவலனைத்தும் தமிழின் வாயிலாகவே நிறைவேற்றி வந்தான். நீதிமன்றங்களில் தமிழே வழங்கப்பெற்றது. தமிழறிஞர்கள் அரசனால் போற்றப் பட்டனர். தமிழ்ப்புலவர்கள் தனது நாட்டில் பெருமையுடன் வாழ்வதற்குரிய பல நன்மைகளையும் நாடிச்செய்தான். தமிழாசிரியர் தக்கமுறையில் ஊர்தொறும் தமிழ்க்கல்லூரி நிறுவித் தமிழை யறிவுறுத்திப் பெருமிதத்துடன் வாழ்ந்தனர்.

கடவுட்கோட்பாடு :—இவன் மாயோன்சேயோன் திருவடிகளில் மாறாத நேயம் பூண்டு விளங்கினான்.

நாட்டினளவு :—இவன் சோழநாடு முழுவதையும் ஆண்டான். இவன் கருவூரைத் தனது அரசிருக்கையாகக் கொண்டு வாழ்ந்தான்.

முடிவுரை :—முசுகுந்தச்சோழன் அரசு செய்தகாலத்தில் மக்கள் திருவுங் கல்வியுஞ் சீரும் சிறப்பும் பெற்று மகிழ்ச்சி பொங்க வாழ்ந்தார்கள்.

நீத்தார்கடனும் தமிழர்மரபும்

II

[வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L.]

வடநாட்டார் தமிழகம் புகுந்த காலம் கி. மு. 1000 என்ப ஆராய்ச்சி வல்லார். கி. மு. 6-ஆம் நூற்றாண்டினது என்று ஒருவாறு கருதப்படும் தொல்காப்பியத்தில் வடமொழியாளர் தமிழகத்தில் நிலைபெற்ற செய்தி நன்கு அறியக் கிடக்கின்றது. கி. மு. 4-ஆம் நூற்றாண்டில் சமணரும் பௌத்தரும் தமிழகத்தில் புகுந்து தங்கள் மதப் பிரசாரமூலம் வடமொழிக்கும் அதன் செல்வாக்குக்கும் ஆக்கம் தேடினர். இன்னபிறவற்றால் எட்டுத் தொகைப் பாக்கள் சிலவற்றுள் பிண்டம் பிடித்தல் முதலிய வடவர் பழக்க—வழக்கச் சொற்கள் சிறிது சிறிதாக நுழையலாயின. **கருமாதி, சிராத்தம், மாசியம், திதி** முதலிய புதிய வடமொழிச் சொற்களும் அவைபற்றிய செயல்களும் வடமொழிப் புரோகிதர்களால் வலியுறுத்தப்பட்டன. மேற் கூறப்பெற்ற சொற்களில் **ஒன்றேனும் தமிழ்ச்சொல் இல்லை** என்பது நன்கு கவனித்தற்குரியது. இவை எல்லாம் வேதங்கட்கோ—உபநிடதங்கட்கோ பொருந்தியனவும் அல்ல என்று வடமொழிப் புலமையும் ஆங்கிலப் புலமையும் ஒருங்குவாய்ந்த ஆராய்ச்சியாளர் பலர் ஆய்ந்து கூறியுள்ளனர்.

பிதிரர்

'பிதிர்க்கடன்' என்று ஒன்று புறநானூற்று உரையிலும் பரிமேலழகர் உரையினும் பிறவற்றிலும் காணப்படுவதாகும். "**பிதிரர்**—அயனால் படைப்புக் காலத்தே படைக்கப்பட்ட கடவுட்சாதி; அதற்கு இடம் தென்திசை ஆதலின் தென்புலத்தார் என்றார்" என்பது பரிமேலழகர் உரை. இதிலிருந்து **பிதிரர் என்பவர்க்கும் இறந்த நம் முதாதையர்கட்கும் யாதொரு தொடர்பும் இல்லை** என்பது அறிதற்பாலது. மநுதர்ம சாத்திரத்தின் சிறந்த உரையாசிரியரான **மேதாதிதி** (கி. பி. 900) என்பவர் இதனை "அர்த்தவாதம்; சிராத்தங்களைப் பெருக்கக் கண்டுபிடிக்கப்பட்டவை" என்று கூறித் தள்ளிவிட்டமையே பிதிர்க்கடனின் பயனின்மையை நன்கு விளக்குவதாகும். "வடமொழி நூல்களில் யாண்டும் தெளிவான—உறுதியான—மறுக்கமுடியாத கூற்றாக இப்பிதிரரின் தொகை, பெயர்கள், வேலை முதலியவை கூறப்படவில்லை. பல நூல்களில் இவை பலவாறு கூறப்பட்டுள்ளன. மநு கூற்றுப்படியும் **காத்தியாய**

னர் ஸ்நான சூத்திரப்படியும் பிறர் கூற்றுப்படியும் இவை வேறுபடுகின்றன. இவையாவும் தம் பிழைப்புக் கருதிப் புரோகிதரால் சேர்க்கப்பட்ட பிற்காலச் செய்திகள் ஆகும்".[1]

சிராத்தம்

"இறந்தவர்க்கு உணவும் நீரும் படைத்தலே **சிராத்தம்** எனப்படும். இச்செயலைப் புரோகிதர் மறைத்து, மக்கள் அறியாமையைத் தம் முதலாகக்கொண்டு பகற்கொள்ளையாகிய தம் வாணிபத்தை மதத்தின் பெயரால் நடத்தத் தொடங்கிவிட்டனர். சிராத்தம் பீகாரிலும் வங்காளத்திலும் எவ்வளவு பொருட்செலவில்—எவ்வளவு அருவருக்கத்தக்க முறையில் நடத்த முடியுமோ அவ்வவ் அளவில் இன்றும் நடைபெற்று வருதல் கண்கூடு. இறந்தவர் ஆவி இன்புறுதற்கு அவ்வக் குடும்பத்தவர் செய்யும் படையல் இடல் முதலியனவே சிராத்தம் எனப்படும். இறந்தவர் 'பிதிரர்' (குடும்பத்து நீத்தோர்) எனக்கோடல் நலம். அவரே 'நந்தி' எனப்படுவர். அவர்கள் களிமுகத்தர் (நந்திமுகர்) எனப்படுதலும் காண்க. ஆண்டு தோறும் நடத்தும் சிராத்தம் தர்ம சூத்திரங்களில் இல்லை எனினும், இன்று இந்துக்களிடை எப்படியோ வந்திருக்கிறது. 'சிராத்தம்' என்பது வேதங்களிலும் பிராமணங்களிலும் கூறப்படவில்லை. இஃதொன்றே இதன் பிற்காலத் தோற்றத்தை விளக்கப் போதியது. 'தந்திரங்கள்' காலத்தில் இதுதோன்றி வளர்ச்சிபெறத் தொடங்கினது. ஹரிவம்சம், மார்க்கண்டேய புராணம் முதலிய பிற்கால நூல்களிற்றான் இது விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இது ஏறத்தாழ 'இறந்தார் வழிபாடு' எனக்கூறலாம். இது சீனர் மதமாகும். 'நிமி' என்னும் முனிவர் ஒரு மகன் இறப்பை நினைத்து சிராத்தம் செய்தனர்; பின்னர் அதற்கு வேதங்களிலும் பிராமணங்களிலும் ஆதாரம் இன்மையை எண்ணி வருந்தியபோது, மற்ற முனிவர்கள் சமாதானங் கூறித் தேற்றினர் என்பது மஹாபாரதம்—அநுசாஸன பர்வம்—138-ஆம் அதிகாரத்துக் குறிப்பொன்றால் அறியலாம். இதிலிருந்தும் சிராத்தம் பண்டையதன்று என்பதை அறியலாம்."[2]

பிண்டம்

"ச-பிண்டம் என்பது சரியான சொல்; 'அதே உடல்' என்பது பொருள். அஃதாவது 'இறந்தார் பொருட்டு உணவு

1. Babu Govinda Doss's 'Hinduism', pp. 363—367.
2. Ibid. p. 367—373

பிடித்து வைப்பவர் இறந்தவர் உடலுக்கு உரிமையானவராக இருத்தல் வேண்டும்' என்பது பொருள். எனவே, 'இறந்தவன் மனைவி, மக்கள்' இவர்களே உரிமை உடையவர்கள் என்பது பொருள். இவர்களைப் பற்றியும் வடநூல் அறிஞரும் அவர் நூல் உரையாளரும் மாறுபட்ட கருத்துடையர்; 'தர்ம ரத்நம்' என்னும் வடநூலின் ஆசிரியரான **சீமுதவாஹனர்** 'பெண்டு களும் பிண்டம் பிடிக்க உரிமை உடையவர்' என்று கூறினர். ஏனையோர் 'ஆண்பிள்ளைகளே உரிமையுடையர்' என்றனர்.''[1]

கோத்ரம்

ரிக்வேதத்தில் 'கோத்ரம்' என்னும் சொல் **'மாட்டுக் கொட் டில்', 'மந்தை'** என்னும் பொருள்களில் வந்துள்ளதே தவிரக் 'குலப்பிரிவு' என்னும் பொருளில் வந்திலது.[2] பின்னர் அது மாட்டு மந்தையை உடையவன் மரபைக் குறித்துப் பிறகு வன்மைபெற்றதாதல் வேண்டும். அமெரிக்கா முதலிய எல்லா நாடுகளிலும் குடும்பப் பெயர்—தலைவன் பெயர் கொண்ட (tribal organisations) குடும்ப நிர்வாஹம் இருந்தமை சரித் திரங்களில் காணலாம். அத்தகைய நிலையையே பிற்காலக் 'கோத்ரம்' உணர்த்துவது. **இஃது ஆரியருடையதே அன்றித் தமிழரதன்று.** முதலில் நான்கு கோத்திரங்களே அவருள் இருந்தன. ஆங்கிரஸ, காஸ்யப, வசிட்ட, பிருகு; பின்னர் அத்திரி, விஸ்வாமித்திர, அகஸ்திய கோத்திரங்கள் சேர்க்கப் பட்டன. இந்த ஏழு கோத்திரங்களின் அடையாளமாக அவ்வக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் தலையில் அவ்வக் கோத்திரத்தைக் குறிப்பிட **ஒருவகைச் சிகை** வைத்திருந்த னர்.''[3]

ஒரு சிறு கூட்டத்தாராய ஆரியரிடம் 5000 ஆண்டுகட்கு முன் எத்தகைய பழக்கம் இருந்தபோதிலும் 'கோத்ரம்' என் னும் சொல்லும் பொருளும் இன்றைய நிலையில் ஹிந்துக்களி டம் முழுவதும் இருத்தல் **பொருத்தமற்றது ; பொருளும் அற்றது.** இதனை நன்கு வெளியிட்டவர் பம்பாய் வழக்கறிஞரும் சிறந்த வைதிகப் பிராமணருமான மேன்மைதங்கிய **விஸ்வநாம் நாராயண மண்ட்லிக்** என்பவரே ஆவர். அவர், ''**க்ஷத்ரியரும் வைசியரும் கோத்ரம் இல்லாதவர்** என்பதில் மறைப்பு ஒன்றும்

1. Babu Govinda Doss's 'Hinduism', p. 374—376.
2. Prof. N. K. Dutt's 'Origin & Growth of Caste in India', Vol. I. p. 67
3. Ibid. pp. 380—383.

இல்லை. இது வேதங்கள் முதலிய பழைய நூல்களையும் இன்றைய சரித்திரத்தையும் கொண்டு கூறப்படுவது. இந்தியா முழுவதும் சிதறிக்கிடக்கும் ஆயிரக்கணக்கான பிராமணரும் இதே நிலையினரே என்பதில் இழுக்கில்லை"[1] எனக் கூறியிருத்தல் கவனித்தற்குரியது. எனவே, ஆரியர்க்குள் 'க்ஷத்ரியர், வைசியர், சூத்ரர்' இவர்கட்கில்லாத 'கோத்ரம்' நம் தமிழ் மக்கட்கு எங்கிருந்து வந்தது? நம் தமிழர் இன்று, பாவம்! தம்மை அறியாது—உண்மை அறியாது 'கோத்ரம்' கூறுகின்றனர். "க்ஷத்ரியர் தம் புரோகிதர் கோத்திரத்தைச் சொல்ல வேண்டும்." என்று அஷ்வலயனர் தமது ஸ்ரௌத சூத்திரத்தில் கூறுகிறார்[2] என்ன கேவலம்! எவனுக்குப்பிறந்து எவன் கோத்திரத்தைச் சொல்லுவது! என்னே தர்மசாத்திர மாண்பு! தமிழ்நாட்டுப் புரோகிதர் புதிதாக இரண்டு கோத்திரங்கள் கூறி வருகின்றனர்; கிரியைகளைச் செய்பவன் சைவன் ஆயின், 'சிவ கோத்ரம்'; வைணவனாயின் 'விஷ்ணுகோத்ரம்' என்று கூறிவருகின்றனர். இன்னும் என்னென்ன கோத்ரங்களைப் பிறப்பிப்பரோ, அறியோம்! இந்தக் கோத்திர ஆபாசங்களை நன்கறிய அவாவுவோர் 'மண்ட்லிக்' எழுதியுள்ள இந்து சட்டம்' என்னும் உண்மை மிக்க ஆராய்ச்சி நூலைப் படிக்கும்படி வேண்டுகிறோம்.

சிராத்தத்தன்று பெற்றோர்க்குச் செய்யும் காரியத்தின் போது "என் தாய் ஒழுக்கம் தவறியிருப்பினும் அவள் பெற்ற ரேதஸ் என் தந்தையது ஆகுக"[3] என்பதைச் சொல்லுமாறு கிருஹ்ய சூத்திரங்களே கூறுகின்றன எனின், இவை வடமொழியில் கூறப்படுகின்றன எனின், இச்சிராத்த மந்திரங்களின் மேன்மையை உணர்தல் தமிழர்க்கு நல்லறிவைப் பயக்குமென்று நம்புகிறோம். "பெண்கள் ஒழுக்கம் தவறியவர்கள். கடவுளர் மனிதர் காண—நான் எவ்வாடவன் மகனாயினும் சரி, இறந்த என் பெற்றோர் மகன் எனக் கூறுகிறேன். நான் அவர்தம் மகனாகவே இருக்கக்கடவேன். 'என் பிள்ளைகள்' என்று நான் சொல்பவரும் என் மக்களாகவே இருக்கக்கடவர்"[4] என்பதும் முன்னதைப் போன்ற மந்திரமாகும்.

---

1. *Vide* his 'Hindu Law', pp. 412—3.
2. Asiatic Society's Edition, p. 885
3. Sankyayana's 'Grihya Sutras', III. 13. 5 } N. K. Dutt's 'Caste in India', pp. 111—118.
4. Hirnya Kesin's 'Grihya Sutras', II. 4. 10 } N. K. Dutt's 'Caste in India', pp. 111—118.

முடிபு

அதிகம் அறைவானேன்? இதுகாறுங் கூறியவற்றால், (1) இவை ஆரியர்க்கு உரியவை என்பதும், (2) ஆனால் ஆரிய பழைய நூல்களிலும் ஆதாரம் அற்றவை என்பதும், (3) இவற்றை ஆரிய அறிஞரே ஒப்புக்கொள்வதில்லை என்பதும், (4) புரோகிதர் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு ஏற்படுத்திக் கொண்டவை என்பதும், (5) இவை ஆரியர் அல்லாத் தமிழர்க்கு முற்றும் புறம்பானவை என்பதும், (6) வேதங்களே இவற்றை வலியுறுத்துக்கூறி யிருத்தலாக வேண்டுமென்றே வைத்துக் கொள்ளினும் தமிழருக்கு ஆரியர் வேதங்கள் ஆதாரம் இல்லை ஆதலால், அவை தமிழர் செய்யத்தகுவன அல்ல என்பதும், (7) எனவே, சென்ற கட்டுரையிற் கூறியபடி இறந்தார் நினைவு என்றும் கொள்ளத்தக்கதே-படையல் இடல்-தெய்வமாக அவரை வணங்கல்-இன்னவையே தமிழர் மரபு என்பதும் அறிவுடையோர் எளிதில் அறிந்தின்புறத் தகுவனவாம்.

தமிழர் மரபு வாழ்க!

16000 வருஷமான மரம்!

ஆஸ்ட்ரேலியா கண்டத்தில் குவீன்லந்து மாகாணத்தில் 'டாலம்' என்ற மலைமீது ஓர் ஈச்சமரம் இருக்கின்றது. அதைத் தாவர வர்க்க சாஸ்திர நிபுணர்கள் பரீக்ஷித்துப் பார்த்ததில் அவ்விருக்ஷத்துக்கு 16000 வருஷ வயது ஆயிருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்.

(டிட்—பிட்ஸ்.)

[காழிக் கண்ணன்]

௭. திருடர்கள்

ஐயரின் நன்றியறிதலின்மையை நினைந்தவண்ணம் நின்ற விடத்திலேயே அரை நாழிகை நேரம் நின்று கொண்டிருந்தேன்; அப்பொழுது என் பின்புறமாக யாரோ வந்து முதுகில் தட்டிக் கொடுத்ததுபோலிருந்தது. திரும்பிப்பார்த்தேன்; மாட்டுக்காரச் சிறுவனொருவன் நின்று கொண்டிருக்கக் கண்டேன். "உன்னை விட்டு விட்டா! போய்விட்டார்கள்? ஐயர் போனாற் போகட்டும். நீ என்னுடன் வா! எங்கள் ரெட்டியாரிடம் சொல்லி உனக்கு நல்ல தீனி போடுகிறேன்." என்றான் அச்சிறுவன். கள்ளங்கபடற்ற அவன் சொற்கள் என் உள்ளத்தைக் குளிரச் செய்தன. மெள்ள அவன்புறம் திரும்பி அவன் கையை நக்கினேன். மகிழ்ச்சி மிகுந்தவனாய், 'வா! என்னுடன்' என்று சொல்லி, சிறுவன் முன் நடந்தான். நான் அவனைப் பின்தொடர்ந்தேன். நாலைந்து கற்கள் அவ்வாறு சென்று நாங்கள் சிற்றூரொன்றைச் சேர்ந்தோம். அவ்வூரின் எல்லையிற் பெரிய பண்ணையார் வீடொன்றும் தோட்டமும் இருந்தன. "இராமா! இதுதான் எங்கள் ரெட்டியார் பண்ணை" என்றான் வீரப்பன். என் பெயரையும் அச்சிறுவன் அறிந்துவைத்திருந்து என்னைக் கூப்பிட்டது எனக்கு வியப்பாகவே இருந்தது.

"வீரப்பா! ஏதடா அந்தக் காளை!" என்று அச்சமயம் ஒரு குரல் கேட்டது. "மாரியம்மன் திடல் 'மஞ்சிவிரட்டில்' கலித்த காளை இது. 'மஞ்சிவிரட்டு' முடிந்ததும் இதை அங்

கேயே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். எனக்கு இதைப் பார்த்ததும் 'ஐயோ' என்று வந்தது. ஐயாகிட்டே சொல்லிப் பண்ணை மாடுகளோடே மாடா இதையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கூட்டிவந்தேன்," என்று வீரப்பன் கூறிவிட்டு, "அவர்கள்தான் பண்ணைக்கார ரெட்டியார்" என்று என்னிடம் மெதுவாகக் கூறினன் வீரப்பன். நானும் அறிந்து கொண்டவன்போல் அவரை ஏறட்டுப்பார்த்தேன்.

"அடே! இந்தக் காளைதானு கெலித்த காளை!. கெலித்த காளையையா விட்டு விட்டுப் போய்விட்டார்கள், மடையர்கள்? சரி, நல்ல வேலை செய்தாய் நீ. அழைத்துக் கொண்டுபோய் கொட்டிலிற் கட்டு!" என்று சொல்லிவிட்டு ரெட்டியார் சென்ருர். அவருடைய அன்புகனிந்த உள்ளமும், இன்சொற்களும் எனக்கு ஆறுதலை யளித்தன. சிறுவன் வீரப்பனிடம் எனக்கு அன்பு பெருகிற்று. என்னை ஓட்டிக்கொண்டு போய்க் கொட்டிலிற் கட்டி அன்றிரவு வேண்டுமளவு தவிடும், பிண்ணுக்கும், வைக்கோலும் வைத்தான் சிறுவன். வயிருரத்தின்று களையாறினேன். மறுநாள் பொழுது விடிந்தவுடன் இன்னும் நாலைந்து உழவுகாளைகளுடன் என்னையும் அருகிலிருந்த தோப்பொன்றிற்கு ஓட்டிச் சென்று மேய்த்து வந்தான் வீரப்பன். பத்து நாட்கள் இவ்வாறு கழிந்தன.

பதினேராம் நாள் என்னையும் என் தோழர்களான ஐந்து உழவுகாளைகளையும் வீரப்பன் ஓட்டிக்கொண்டு சற்றுத்தொலைவிலிருந்த இடிவிழுந்தான் தோப்பிற்கு வந்தான். அவ்வூரிலிருந்த மற்ெருரு பண்ணையாரான முதலியாரின் மாட்டுக்காரச் சிறுவனும் மூன்று காளைகளை ஓட்டிக்கொண்டு முன்னமேயே அங்கு வந்திருந்தான். அவன் வீரப்பனையும் எங்களையுங் கண்டதும், "வீரப்பா! இங்கே நீயுமாடா வந்து சேர்ந்தாய்? இந்தத்தோப்புக்கு வரக்கூடாது என்று சொல்வார்களே! நானே 'என்னடா தெரியாமல் இங்கே வந்துவிட்டோமே, திரும்பிப் போய்விடலாமா?' என்று நினைத்துக்கொண்டிருந்தேன்; அதற்குள் நீயும் வந்துவிட்டாய்" என்ருன்.

"இல்லையடா காளியப்பா! நான் முதலில் இங்கே வரக்கூடாதென்று தான் நினைத்தேன்; ஆனல் நீ உன்மாடுகளை ஓட்டிக்கொண்டு இங்கே வந்ததைத் தொலைவிலிருந்து பார்த்தேன். சரிதான் நாமும் அங்கேதான் போவோமே என்று துணிந்து வந்துவிட்டேன். இந்த ஞானியார் குளத்துத் தண்ணீர் பால்போலே இருக்கும். வந்ததுதான் வந்தோம், சீக்கிரம்

இதில் குளித்துவிட்டுப் போய்விடலாம் வா!'' என்று வீரப்பன் அழைத்தான்.

"ஆமடா, அதற்காகத்தான் நானும் வந்தேன். இங்கே எல்லாம் ஒன்றும் பயமில்லேடா. அதோ தெரியுதே இடிவிழுந்த ஞானியார் மடம்! அதுகிட்டே தானடா நாம் போகக் கூடாது. மரமுஞ்செடியுங் காடாக மண்டிக் கிடக்கிற அந்த இடத்தைப் பார்த்தால் கூட எனக்குப் பகீர் என்றிருக்குது!''

இவ்வாறு பேசிக்கொண்டே இரண்டு சிறுவர்களும் எங்களைக் கரையில் மேய விட்டுக் குளத்திற் குளிக்க இறங்கினார்கள். என் தோழர்களான காளைகள் மூலைக் கொருவராகப் புல்மேயச் சென்றனர். எனக்குமட்டும் அந்தப் பாழ் மடத்தைப்போய் பார்க்கவேண்டுமெனத் தோன்றிற்று. இச் சிறுவர்கள் ஏன் அதைக் கண்டு பயந்தார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆகவே மெள்ள மெள்ள நான் அம்மடம் இருந்த இடத்தை யடைந்தேன். முற்புறம் உயரமான இடிந்த சுவரொன்று நின்றுகொண் டிருந்தது. அதன் மேற்புறமெல்லாம் மரமும் புதரும் மண்டிக் கிடந்தமையால் இருளாவென் றிருந்தது. மெள்ளச் சுவரின் கீழ்ப்புறம் சென்று எட்டிப்பார்த்தேன். அங்கேயும் காடாக இருந்தாலும், ஒற்றையடிப்பாதை யொன்று தென்பட்டது. அதன்வழி மெதுவாக உட் சென்றேன். ஆ! எவ்வளவு பெரியகட்டிடம் இடிந்து விழுந்து கேட்பாரின்றிக் கிடந்தது! அதன் வெளிப்புறமிருந்த திண்ணைகளில் மட்டும் நூறுபேர் படுத்துக் கொள்ளலாம்! வாயிற்படியும் கதவுகளும் நன்றாகவே இருந்தன; ஆனால் உட்புற மண்டபம் இடிந்து கிடந்தது. பெரிய பெரிய கல்தூண்கள் நின்றுகொண் டிருந்தன. எப்பொழுதுமே பயம் என்பது இன்னதென அறியாத நான் மெள்ள மேற்சென்று பார்த்தேன். ஆ! அதென்ன ஓசை! யாரோ கிணற்றுக்குள் ளிருந்து பேசுவது போல் இருந்ததே! எனக்கு மேற்புறத்தி லல்லவோ அதுகேட்டது! விரைந்து சென்று மடத்துத்திண்ணையின் பின்புறம் நான் ஒளிந்து கொண்டேன். மேற்புறமிருந்த ஒரு புதர் அசைந்தது. கூர்ந்து கவனித்தேன். யாரோ ஓர் ஆள் கிளைகளை விலக்கிக்கொண்டு தலையை நீட்டி அங்கு மிங்கும் பார்த்தான்.

"அடே, வாங்கடா! ஓசைகாட்டாமல் சென்று மாடுகளை ஓட்டிவரணும்! தெரியுமா?'' என்று கூறினான். அவன் பின்

ஒருவர் பின்னொருவராக ஆறு முரடர்கள் வெளிவந்தனர். அவர்கள் தரையில் மீதுதான் நடந்து சென்றார்களா என்பது எனக்கு ஐயமாக இருந்தது. அவ்வளவுமெல்ல அவர்கள் பதுங்கிப் பதுங்கிப் பூனைபோல் சென்றனர். நான் திண்ணையின் பின்புற மிருந்த புதர்களிடையே நன்றாகப் பதுங்கிக் கொண்டேன். விரைவில் காளைகளுடன் அம்முரடர்கள் திரும்பினர்; என் தோழர்கள் ஒவ்வொருவராய் மடத்தின் மேற்புறம் ஓட்டப்பட்டனர். ஏன் என் தோழர்கள் நாய்க்குட்டி போல் அடங்கிச் சென்றனர் என்பது எனக்குத் தெரியவில்லை. "எண்மரில் ஒருவரேனும் வாயைத்திறந்து ஒரு தரமாவது கத்தக்கூடாதா? அட பைத்தியங்களே!" என்று நினைத்துக் கொண்டேன்.

ஓசை அடங்கிவிட்டது. மெல்ல வெளியில் வந்து பார்த்தேன். ஒருவரையுங் காணவில்லை. மேற்புறம் சென்று என் தோழர்கள் சென்ற புதரிடை எட்டிப் பார்த்தேன். நிலத்தின் கீழ்ச் செல்லும் அகன்ற வழி யொன்று செடிகளாலும் புதர்களாலும் மூடப்பட்டுத் தென்பட்டது. ஒருவாறு எனக்கு உண்மை புலப்பட்டது. மாடு திருடும் "வாணுபுரத்துக் குள்ளர்கள்" என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன்; அவர்கள் மாடுகளைப் பிடித்துக் கொண்டுபோய் நிலத்தின் கீழுள்ள பெரிய பெரிய நிலவறைகளிற் கட்டி வைத்துக் கொண்டு, மீட்க வருபவர்களிடம் நிறையப் பொருள் பெறுவார்கள் என்றும் கேள்விப் பட்டிருக்கிறேன். அவர்களைச் சேர்ந்த ஒரு சிறு கூட்டத்தார்தான் என் தோழர்களை ஓட்டிச் சென்றிருக்க வேண்டும். அவர்கள் இதன்கீழ் நிலவறைக்குள் தான் இருக்கிறார்கள் போலும்! இதற்கென்ன யோசனை!" என்று நினைத்த வண்ணம் நான் குளக்கரைக்குத் திரும்பி வந்தேன்.

அதற்குள் சிறுவர்கள் காளைகள் எங்கே எங்கே என்று அங்குமிங்கும் தேடி அலைந்து கொண்டிருந்தனர். நான் வருவதைக் கண்டதும், "அடே, இதோ ராமன் மட்டும் தனியா வருகிறதடா! மற்றக் கழுதைகள் எங்கே? வாணுபுரத்துக் குள்ளர்கள் ஓட்டிக் கொண்டு போய் விட்டார்களா? என்ன? இல்லை, எல்லாம் அந்தப் பாழ்மடத்திற்குள்ளே போய் மேய்ந்து கொண்டிருக்குதுங்களா, என்ன? எதற்கும், வாடா போய் பார்த்து வரலாம்!" என்றான் வீரப்பன்.

"இந்த ராமன் அந்த மடத்தின் பக்கம் இருந்து தானேடா வந்தது! வாடா போய்ப் பார்த்துவரலாம்" என்று காளியப்பன் முன்னே இரண்டடி வைத்தான். அதைக் கண்ட நான்,

"எங்கே இவர்கள் தெரியாத்தனமாய்ச் சென்று கள்ளர்களிடம் சிக்கிக் கொள்வார்களோ" என்று அஞ்சினவனாய், அவர்களுக்கு முன் சென்று வழியை மறைத்தேன்.

'(என்னடா! இந்த இழவெடுத்த காளை வழியை வழியை மறைக்குது! அடிச்சு விரட்டடா!" என்றான் காளியப்பன்.

"போடா; அது காரணமில்லாமல் மறைக்காதடா. இது அறிவு மிகுந்த காளை என்று சொல்லியிருக்கார்களடா! அது எப்பொழுது நம்மைத் தடுக்கிறதோ நாம் அங்கே போகக் கூடாது என்று தான் அர்த்தம். போனால் நம் உயிருக்கே மோசம் வந்தாலும் வரும். சரி, சிவனே என்று வா! போய்ப் பண்ணையாரிடம் செய்தி தெரிவித்து விடலாம்", என்றான் வீரப்பன்.

அதைக் கேட்ட நான் மகிழ்ந்து, அவர்களை வழி மறித்து நிற்பதை விட்டுச் சட்டெனத் திரும்பி ஊரை நோக்கி விரைவாக நடந்தேன்.

"அடே, இது என்ன காளையடா? நாம் பேசுவதெல்லாம் அதுக்குத் தெரியும் போலே யல்லவோ இருக்கிறது! இத்தனை நாழி வழியை வழியைக் கட்டிற்று. இப்பொழுது என்னடா என்றால் நமக்கு முன் ஊருக்குப் புறப்பட்டு விட்டதே!" என்று வியந்து கூறினான் காளியப்பன்.

நாங்களெல்லோரும் விரைவில் ஊர் வந்து சேர்ந்தோம். பண்ணைக்கார ரெட்டியாரிடம் வீரப்பனும் காளியப்பனும் நடந்ததைக் கூறினார்கள். "அப்படியா சங்கதி! இந்தக் கள்ளர்கள் நம்மிடமே வாலைக் காட்டத் தொடங்கி விட்டார்களா! இனி ஒட்ட நறுக்கி விட வேண்டியது தான்!" என்று கூறிக் கொண்டே அவ்வூர்ப் போலீஸ் சாவடியை நோக்கி ரெட்டியார் விரைந்து சென்றார்.

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 56-ஆம் ஆண்டு நிறைவு விழாவில்

தாகூர்சட்ட விரிவுரையாளர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் நிகழ்த்திய

தலைமைப் பேருரை

திருமந்திர நகரமென்னும் இவ்வூரின்கண், சைவத்திரு மன்னுந் திறம்படைத்த இப்பேரவையானது தமிழ்நாட்டில் நீண்ட ஆயுள்படைத்த சங்கங்களுள் தலைமைபெற்று விளங்குவதால், இதன் ஐம்பத்தாறும் ஆண்டு நிறைவு விழாவில் தலைமை பூணும் பேறுயான் பெறும் பேறுகளுள் தலைமையாயது எனக் கருதி, அவையினர் பேரன்பாற் செய்த வேண்டுகோளை எனது பேரவாவினுற் பயன்படுத்திக்கொண்டேன். தலைமை தாங்குந் தகுதியின்மை அவா மேலீட்டால் எனக்குத் தோன்றுதிருத்தல் இயல்பே. முன் ஒரு முறை (38-ஆம் ஆண்டு நிறைவு விழாவில்) தலைமை பூண்டிருந்தும் மீட்டும் அவையினர் அப்பதவியை எனக்கு அளிக்கக் கருதியது அவர்களது அளவு கடந்த பேரன்பினுலேதான் என்பது தெளிவு. அதற்குத் தக்க கைம்மாறு யானறிகிலேன். நிலைபேறில்லாத திரு நிலைப்பினும் நிலையாது போயினும் நிலையுடைய பெருஞ் செல்வமாகிற சிவமணம் கமழுஞ் செந்தாமரை மலராக இச்சங்கம் என்றும் நின்று நிலவி ஓங்குவதாக.

உலகெலாம் போற்றும் விரிந்த நோக்கமுடைமையில் இணையற்றுத் திகழ்வது பழந்தமிழரது பெருநெறியாகிய சிவநெறியே என்பதையும், தற்கால அறிவியலுக்கு முற்றிலும் ஒத்து, அதற்கு எட்டாத உயர்நிலையில் செல்லுகின்ற கடவுண் முதல் நெறி அஃதேயாம் என்பதையும் அறியாத சிலர், நமது சமயத்தைக் குறுகிய நோக்கமுடையதென்றும், அறிவியற் பொருத்தமற்றதென்றும், ஆரியச்சார்புடையதென்றும், இகழ்ந்துரைக்கின்றனர். உண்மையை வற்புறுத்து முகத்தான் அவ்வுரை பிழைபட்டதென்பது தெளிவுபடுத்தப்படும். பிறர் நமது செந்நெறியைக் குறை கூறுதற்குக் காரணம் நம்மவர்களுட் பலருடைய தவறுகளே யாகும். நம்மவருள் நமது சமயக் கொள்கை இன்னதென்றே அறியாதவர்கள் நூற்றுக்குத் தொண்ணூற்றுென்பது பேராவர். கொள்கையை உணர்ந்தும் செயல் முறையிற் கொள்கைக்கு மாறுக நடப்பவர்கள்

மிருதிப்போராவர் செயல்முறையைவைத்தே உலகம் நெறியின் பெருமையைத் தீர்மானித்தலின் செயல்முறை கொள்கைக்கு ஏற்றவாறு அமையவேண்டுமென்பதை அறிஞர் நன்குணர்வர். அதை மீட்டும் மீட்டும் உரைப்பது மிகையாகும். சிவநெறியின் உண்மைப் பொதுக் கொள்கையைச் சிவஞான போத சூத்திரச் சுருக்க ஆராய்ச்சியால் விளக்குவதே இம்முன்னுரையின் நோக்கமாகும்.

கட்டுப்பாடோடு கூடிய ஒரு நெறியினைச் சிவநெறி என்று கருதுபவர், ஆரியச் சாதிக் கொள்கையும் ஆரியர் வேள்வி முறையும் தழுவிக்கொண்டவராவர். சிவநெறிப் பெருந்தலைவர்களாகிய நால்வரும், பிறபெரியாரும் மேற்கொண்ட அருள் நெறி உலகிற்குப் பொதுவாகிய ஒரு நெறியேயாம். திருஞான சம்பந்தர், "ஞால நின்புகழே மிகவேண்டும்," "அரன் நாமமே சூழ்க வையகமும் துயர்தீர்கவே" என்று அருளிச்செய்த விடத்தும், திருநாவுக்கரசர் "உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே", "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" என்று அருளிய விடத்தும் உலகப் பொது நெறியாகிய சிவநெறியே குறிக்கப் பட்டது காண்க. பெரியபுராணம், 'உலகெலாம்' என்று தொடங்கி 'உலகெலாம்' என்று முடிகின்றது. திருஞான சம்பந்தர் சோதியிற் கலந்த விடத்து 'ஆறுசமயத் திருந்தவரும்', 'வேறு திருவருளினால் வீடுபெற வந்தாரும்' சோதியிற் புகுந்தனரென ஆசிரியர் சேக்கிழார் குறித்தமை காண்க. அப்பாலும் அடிச்சார்ந்தாரில் எந்நாட்டிலுள்ளவர்களும் எக் காலத்திலுள்ளவர்களும் இறைவனடி பேணுவராயின் அவர் தொண்டராக அடங்குதல் காண்க. இந்நன்னெறியினைச் சேர்ந்து செகத்தாரெல்லாம் ஒழுகுதல் வேண்டுமென்று தாயுமானார் உலகினரை அறைகூவி யழைத்தனர். பெரிய புராணத் தற்கால உரையாசிரியருள் ஒருவராகிய திரு. வி. கலியாணசுந்தரனார் "சிவநெறி கட்டுப்பட்ட நெறியன்று; அஃது உலகில் வழங்கப்படும் எல்லா நெறிகளுமாய் அவைகளுக்கு உயிருமாய் இருப்பது" எனக் கூறுதல் காண்க.

இங்ஙனங் கூறுங்கால், ஒரு சாரார் "சிவனே பெரிய கடவுள்; அரி அயன் முதலியோரெல்லாம் கடவுளரல்லர்" என்று வாதித்தல் சைவக் கொள்கையாய் இருப்பது யாங்ஙனம்? பேரும் உருவமும் இல்லாத கடவுளுக்குப் பேரும் உருவமும் சைவசமயத்துட் கற்பித்துக் கூறப்படுகின்றனவே; சிவபுராணங்களுள் உயிரின் குறைபாடுகள் தெய்வத்துக்கு ஏற்றிப் பேசப்படுகின்றனவே" என்று தடை எழுப்புகின்றார்

கள். பல தெய்வங்களையும், முழுமுதற் கடவுளையும் பற்றிக் கூறும் உபநிடதம், புராணம் முதலிய நூல்களை ஆராய்ந்தவர்கள் முழு முதற்கடவுளைக் குறிக்கும் பெயர் சிவம் என்ற சொல்லும் அதன் சார்பான சொற்களுமேயாமென்று நாட்டுமிடத்துச் சிவபரத்துவங் கூறுவர். அவ்வாராய்ச்சியிற் புகாது இறையிலக்கணம் ஒன்றையே தெரிவார்க்குத் திருவள்ளுவர் நூலுள் அது செவ்வனே கூறப்பட்டுளது. அவ்வாராய்ச்சியும் பொருத்தமானது என்பதை ஓர் உதாரணத்தாற் காட்டுதும். பாஷையாகிய மொழியில் இன்ன சொல்லிற்கு இன்ன பொருளென்பது வரையறுக்கப்படவேண்டும். அன்றெனில், பேச்சுக் குழப்பம் ஏற்பட்டு உண்மை அறியப்படா தொழியும். குதிரையினை ஒருவன் குதிரை என்று சொல்லுங்கால், மற்றொருவன் குதிரையின்மேல் "குதிரை" என்று எழுதப்படவில்லையே, அதனால் நான் அதனைக் "கழுதை" என்பேன் என்றும், மூன்றாவது நிற்பவன் அதனை "நாய்" என்பேன் என்றும் வாதித்தால் பேச்சில் குதிரை இலக்கணம் இன்னது நாய் இலக்கணம் இன்னது என்பதை எவ்வாறு தெளிவாக அறிய முடியும்? குதிரையிலக்கணத்தைக் கழுதைக்கும் நாய்க்கும் சிற்சிலர் கூறத்தொடங்கிப் பேச்சுக் குழப்பம் ஏற்படும் அல்லவா? அதனைப் பரிகரிப்பதற்கு மொழி பேசுவார்களுள் இன்னதற்கு இன்னதுதான் பேராக இருக்க வேண்டுமென்று அறிஞன் ஒருவன் வரையறை செய்தால் அது குற்றமாகுமா? அதுபோலப் பலதெய்வங்களைப்பற்றிக் கூறும் நூல்களுள் முழுமுதற் கடவுளது இலக்கணம் "சிவ" முதலிய பேர்களாற் குறிக்கப்படுகின்றது, என்று சைவர் காட்டினால் அது குற்றமாவது யாங்ஙனம்? வைணவரும் அவ்வாறே காட்டுவாரேயெனில் இருதிறத்தார் வாதத்தையும் கேட்டுத் தன்னுடைய பகுத்தறிவினால் உண்மையை ஒருவன் உணர்தலே பொருத்த மாகும். இவ்வாதத்தைக் கேட்க விருப்பமில்லாதவன் அவ்வாராய்ச்சியிற் புகாதிருப்பதே நலம். ஆராய்ச்சியிற் புகாதவன் ஆராய்ச்சியை அவசியமில்லை என்னலாம். அதனைத் தவறு என்று எவ்வாறு கூற முடியும்? கணித நூல் தெரிய விருப்பமில்லாதவன் கணித நூலைப்பற்றி ஆராயாதிருக்கலாம். கணிதநூல் தவறு என்று எவ்வாறு அவன் கூற முடியும்?

இனி, கடவுளுக்குப் பேரும் வடிவமும் இல்லை என்பதைச் சைவர் அறிந்தவர்களே. "ஒரு நாமம் ஒருருவம் ஒன்று மிலார்க்கு" எனவும், "ஊருமிலார் பேருமிலார்" எனவும், "உருவுமிலன் அருவுமிலன்" எனவும் சைவ நூல்கள் தாமே கூறுகின்றன. ஆயின் பேரும் வடிவமும் இல்லாத ஒரு பொருளை நினைத்தல் மனித ஆற்றலுக்கும் இயலாததாகும். மகமதியரும், கிருஸ்தவரும் கடவுளுக்கு முறையே "அல்லா" வென்றும், "செகோவா" என்றும் பேர் கூறுகின்றார்கள். உலகத்தில் கடவுளுக்கு வடிவம் அமைக்காவிட்டாலும் வானில் ஓர் இருப்பிடமும் அங்கே வடிவமும் கடவுளுக்கு அவர்கள் சமய நூல்கள் கூறுகின்றன. அந்நூல்கள் கூறும் வடிவத்தினை மனதில் அவர்கள் தியானித்தல் இயல்பு. மன ஒருமைப்பாடு இல்லாதவர்கள் மனத்தை நிலைப்படுத்துவதற்குப் புறத்தே உருவமும், படமும் வைத்துக்கொள்ளுதல் எவ்வாறு குற்ற மாகும்? கண்ணுக்குத் தெரியாத அறிவைப் பெறுவதற்குக் கண்ணுக்குப் புலனாகின்ற எழுத்தையும், காதுக்குப் புலனா கின்ற ஒலியையும் மக்கள் பயன்படுத்துதல் போலக், கண்ணுக் குத் தெரியாத கடவுளை வழிபடக் கண்ணுக்குப் புலனாகின்ற வடிவம் அமைத்துக் கொள்ளுதல் மக்கள் இயல்பிற்கு ஒத்த தேயாகும். கடவுள் எங்கும் இருந்து எல்லாவற்றையும் அறிந்து பயனளிக்கின்றார் என்ற நம்பிக்கை உடையவர்கள் தாங்கள் வழிபடுகின்ற வடிவத்திலும் கடவுளிருந்து தங்கள் வழிபாட்டை அறிந்து பயனளிக்கின்றார் என்று கொள்ளுதல் எவ்வாறு பொருத்தமற்றதாகும்? மக்கள் தங்கள் சிற்றறிவுக்கு ஒத்தவாறு கடவுளுக்குப் பேரும் வடிவமும் அமைத்துக் கொண்டனரே யன்றிக் கடவுளுக்குப் பேரும் வடிவமும் அவ சியமில்லை என்பதே சைவக்கொள்கையாகும்.

இனி, சிவபுராணங்களில் தெய்வத்திற்கு உயிர்க்குணங்கள் கூறப்படுகின்றனவெனில் முழுமுதற் கடவுட்கு அதனாலிழுக் கில்லை. கடவுளின் தன்மையை அடைந்ததாக உபசரிக்கப்படும் தெய்வப்பதவியை அடைந்த உயிர்களுக்கே குறைபாடுகள் சிவ புராணங்களுட் காணப்படும். பூரணத்தன்மை யடையாத உயிர்க ளிடம் குறை இருத்தல் இயல்பே. முழுமுதற் கடவுளின் திரு விளையாடல்களாகக் கூறப்படுவனவெல்லாம் ஒவ்வோர் உண் மையை உணர்த்தும் அறிகுறிகளேயாகும். அவற்றின் உண் மைக் கருத்துக்கள் சித்தாந்த நூல்களுட் புலப்படும். கற்பனை பற்றிப் புனைந்துரைகளும் பல புராணங்களுட் கலந்திருத்தல் தவறாதலினாலே புராணத்தை மாத்திரம் பிரமாணமாகக் கொள்ளுகின்றவர்களைப் "பௌராணிக மதத்தின" ரென்று

சைவ மெய்ந்நூல்கள் கழித்தொதுக்குகின்றன. ஆதலால் உண்மையை ஆராய்ந்தவர்கள் புராணத்தில் கொள்ளத்தக்கன வற்றைக் கைக்கொண்டு தள்ளத்தக்கனவற்றை ஒதுக்கிவிட லாம். எப்பொருளினிடத்தும் மெய்ப்பொருளை உணருகின்ற தேவார திருவாசக முதல்வர்கள் மெய்க்கருத்துக்களுக்கு அறிகுறியாக மாத்திரமே புராணகதைகளைத் தழுவிக்கொண் டவராவர். "பரத்தின் மறைந்தது பார்முதல் பூதம்" என்ற படி மெய்ப்பொருளையே நோக்குவார்க்கு அவற்றோடு கலந்த பொய்ப்பொருள் தோன்றுவதில்லை. ஆதலின் அவர்கள் குறிப் பது மெய்ப்பொருளைப் பற்றிய உண்மையளவே என்று பகுத் தறிய வேண்டுவது நம்மவர் கடனாகும்.

(தொடரும்)

கலித்தொகை மாநாடு

சென்னையில் **கோவிந்தப்ப நாய்க்கர் பள்ளிக்கூட மண்ட பத்தி**லேதான் இம் மாநாடு மார்ச்சு 9, 10-ம் நாட்களிற் கூடிற்று. சைவசித்தாந்தக் கழகத்தைச் சேர்ந்த **தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார்** இம் மாநாட்டைக் கூட்டித் தமிழன்பர் களிடையே கிளர்ச்சியை உண்டாக்கினார்கள்.

சங்கநூற் புலமையில் மாட்சிமை மிக்கவர்களும், அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திற் பெருந்தமிழ்ப் புலமை நடத்து கின்றவர்களுமான **ஆசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டா ரவர்கள்** இந்த இரண்டு நாட்களும் அவைத்தலைவரா யிருந்து அவையைத் திறம்பட நடத்தினார்கள்.

டாக்டர் சின்னசாமிப் பிள்ளை, S. முத்தைய முதலியார், S. வையாபுரிப் பிள்ளை, N. இரத்தினசபாபதிப் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், பண்டிதை கிருட்டின வேணியம்மை, நாராயணியம்மை, அரங்கநாயகியம்மை முத லிய பெருமக்கள் தாய்மார்கள் பலரும் சென்னையிலும் அதனை அடுத்துமுள்ள தமிழாசிரியர்களிற் பெரும்பான்மையோரும் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள்.

9-ம் நாள் மாலை 6-மணிக்குச் சரியாய் அவை தொடங் கிற்று. கல்வித்துறையில் மாட்சிமைப்பட்ட இம் மாநாட்டுக்கு நம் நாட்டார் அவர்கள் அவைத்தலைவரா யிருக்க நேர்ந்தது பெரிய பேறு என்றுமுன்மொழியத், தலைவரவர்கள் அவையி னரின் ஆரவாரத்தினிடையே தமது தலைமையை ஏற்று

முன்னுரையாகக், கலைப்புலமை மிக்கதோர் அரிய விரிவுரையை நிகழ்த்தினார்கள். அது, பல்லாண்டு காலமாகக் கல்வியிற் பண்பட்ட பேருள்ளத்துடன் கூடியதாதலால், கல்வித்துறையிற் செல்வோர்க்கு நேரும் பல ஐயங்களை அது தீர்த்தது.

பின், சென்னை லயோலா கல்லூரி விரிவுரையாளரான **வித்துவான் E. K. நடேச சர்மா** அவர்கள் '**முல்லைக் கலி**' என்பதுபற்றியும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளரான ஆயிர ரூபா பரிசுபெற்ற **வித்துவான் மு. வரதராஜனார், B. O. L.** அவர்கள் '**மருதக் கலி**' என்பதுபற்றியும் ஆராய்ச்சி முறையோடு கூடிய இரண்டு அரிய விரிவுரைகளை முறையே நிகழ்த்தினர். அவையோர் களிப்பு, மேலுமேலும் மிகுவதாயிற்று. விரிவுரையாளர்களின் ஆராய்ச்சிப்போக்குகளும் மாட்சிமைக் கருத்துகளும்பற்றித் தலைவரவர்களின் இனிய முடிவுரை, அவர்களாராய்ச்சியிற் கண்ட அருங் கருத்துகளுடன் நிகழ, அன்றைய அவை இரா 9-மணிக்கு இனிது நிறைவெய்தியது,

மறுநாள் 10-3-40—மாலை 4-மணிக்கே மாநாடு கூடிற்று. முன் நாளைவிடக் கூட்டம் பெருகிவிட்டது ; இன்றைய அவை 5-மணி நேரம் இரவு 8-மணிவரையில் கிளர்ச்சியாய் நடைபெற்றது. கடைசிவரையிற் கூட்டம் பெருகியபடியே யிருந்தது. மகளிரும் இன்று அணியணியாக வந்தபடியே யிருந்தனர். நாட்டில் சங்கநூல்களைப்பற்றி இத்துணை உணர்ச்சி இப்போது மிகுந்துவிட்டதுகுறித்து எல்லார்க்குமே வியப்பும் ஊக்கமுங் கிளர்ந்தெழுந்தன.

சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் ஆராய்ச்சி மாணவியாரான திரு. **K. ஞானம்பாள் அம்மையார், M.A.,** அவர்களும், திரு. **இளவழகனா**ரவர்களும், முத்தையாலுப் பேட்டை உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியரான **வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை, B. O. L.** அவர்களும் இன்றைய பேச்சாளர்கள். முறையே '**பாலைக் கலி**', '**நெய்தற் கலி**', '**குறிஞ்சிக் கலி**' களைப்பற்றிப் பேசினார்கள். அவையில் ஒரே ஆரவாரம்; பெருங் கிளர்ச்சி ; தண்ணீர்க் கயத்துள் நிறைய மலர்ந்த தனிச் செந்தாமரை மலர்களைப்போலவே, மாநாடு மண்டபம் முழுமையும் ஒரே முகர்மலர்களா யிருந்தன. தகுதியான நல்ல முடிவுரையை அவைத்தலைவரவர்கள் வழங்கினார்கள்.

சங்கநூலுணர்ச்சி அவையில் மேலோங்கிவிட்டது. மாநாட்டில், ஒருமுகமாகப் பெருங்கிளர்ச்சியுடன் நிறைவேறிய

தீர்மானங்களே அதனை மெய்ப்பிக்கக்கூடியனவா யிருக்கின்றன.

முதல் தீர்மானம்: சில தினங்களுக்குமுன்னே முதல் முதலாகச் சென்னையில் 'பத்துப்பாட்டு மாநாடு' கூடி, ஒரு நல்ல உணர்ச்சியை ஊட்டிற்று; இப்போது, 'கலித்தொகை மாநாடு' கூடி இத்தனைப் பெருங் கிளர்ச்சியைப் பெருக்கிவிட்டது. இப்படியே சங்கநூல்கள் பலவற்றுக்கும் பல மாநாடுகளை அடிக்கடி கூட்டித் தமிழகத்துக்கு மாட்சிமை தேடவேண்டும்; அதுவும், 'ஜில்லாக்'கள்தோறும் அப்படிச் செய்யவேண்டும்; மேலும் அந்தந்த மாநாட்டின் சொற்பொழிவுகளை முன்னதாகவே அச்சிட்டு அவ்வக் கூட்டத்திலேயே வழங்கவேண்டும் என்பது.

இரண்டாவது தீர்மானம்: தமிழ்க் கலைகளின் தொடர்பான இத்தகைய கூட்டங்கள் சென்னையில் திரளான கூட்டத்துடன் முறையாகவும் அடிக்கடியும் நிகழவேண்டி யிருப்பதனால் தமிழ் உணர்ச்சியோடு கூடிய இடவசதி, இக் கூட்டங்கட்கென்றே தனியாய் அமைந்திருக்க வேண்டும். ஆதலால், சென்னையில் '**சங்க நூல் மண்டபம்**' என்னும் அழகிய பெயருடன் ஒரு நல்ல **விரிவுரை மண்டபம்** தோற்றுவிக்கவேண்டும் என்பது.

'கலித்தொகை மாநாடு' இவ்வளவு சிறப்போடுங் களிப்போடுங் கூடியதேனும், இடை யிடையே, தமிழர் தலைவரும் இந்தியா அமைச்சரின் சுற்றமுமான **சர் பன்னீர்ச் செல்வம்** அவர்களைப்பற்றிய நினைவு அடிக்கடி உள்ளத்தில் ஊடுருவிக் கொண்டே யிருந்தது. அவர்களைத் தேடும் முயற்சியை அரசினர் இன்னமும் மேற்கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் அவையில் உருப்பெற்றது. உடனே அது, **மூன்றாவது தீர்மா**னமாகப் பேராவலுடன் நிறைவேறியது.

இந்த மூன்று தீர்மானங்களையும் சென்னைப் பச்சையப்பன் பள்ளி ஆசிரியர் திரு. **T. செங்கல்வராயப் பிள்ளை, B.A., L.T.,** அவர்கள் முன்மொழிந்து, அவற்றின் முதன்மைகுறித்துத் திறமான பேச்சினால் நன்கு விளக்க, லயோலா கல்லூரி விரிவுரையாளரான திரு **E. K. நடேச சர்மா** அவர்கள் அம் மூன்றையும் அப்படியே பின்மொழிந்து ஆதரித்தார்கள்.

இந்த மாநாட்டில் மேலும் நிகழ்ந்த பெருஞ்சிறப்பொன்று எல்லார்க்கும் நல்ல கவர்ச்சியை உண்டுபண்ணி யிருக்கிறது. இதனை நடத்திய சங்கத்தார், இம்மாநாட்டின் சொற்பொழிவு

களை யெல்லாம் '**கலித்தொகைச் சொற்பொழிவுகள்**' என்னும் பெயருடன் ஒரு நூலாக அச்சிட்டுக், கூட்டத்திலேயே எளிய விலைக்கு வழங்கினூர்கள்; அவைத்தலைவரவர்கள் தலைமையுரையும் அதிற் சேர்ந்திருக்கின்றது. ஆசிரியர்கள் படங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த முறையில் வந்தது இதுவே முதல்முறையாய்ப் பின் மாநாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாய்த் திகழ்கின்றது.

இன்னொரு கவர்ச்சியும் நிகழ்ந்தது; தலைவரவர்களுக்கும் சொற்பொழிவாளர்களுக்கும் ஒவ்வொரு கலித்தொகைநூல், உயர்ந்த கட்டிடத்தில் தனிச்சிறப்பாகச் செய்து, அவரவர் பெயர்களையும் பொன்னெழுத்திற் பதித்து, நல்ல முறையில் வழங்கினூர்கள். முதல் நாள், திருவாளர் **பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியா** ரவர்களால், தலைவரவர்கட்கும் அன்றைய விரிவுரையாளர்களுக்கும் இப்பரிசு வழங்கப்பட்டது. அடுத்த நாள், தலைவரவர்களே வழங்கினர்.

முடிவாகச், சங்கச்செயலாளர் திரு. வ. **சுப்பையா பிள்ளை** யவர்கள், அனைவர்க்கும் அவரவருதவிகுறித்து மகிழ்வுடன் நன்றிகூற, மாநாடு, பொங்கிய பெருங்கிளர்ச்சியுடன் நன்கு நிறைவெய்தியது.

செய்திகளும் குறிப்புகளும்

சர். ஆ. தா. பன்னீர்ச்செல்வம்

தஞ்சைக் கூற்றத்தில், இந்தியக்கிறித்தவ உடையார் குடும்பத்தில், 1883-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல்நாள், ஆரோக்கியசாமி தாமரைச்செல்வம் பன்னீர்ச் செல்வம் அவர்கள் பிறந்தார்; திருச்சி ஸெயின்ட் ஜோஸஃப் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்று, இலண்டனுக்குச் சென்று பார்-அட்-லா ஆனூர்.

பின்னர், இப்பெரியார் இந்தியாவிற்குத் திரும்பிவந்து சிறந்த வழக்கறிஞராகவும், பப்ளிக் பிராசிக்யூட்டராகவும் தஞ்சையிற் சிலகாலம் தொழிலாற்றினர். 1918 முதல் 1920 வரை தஞ்சை நகராண்மைக் கழகத்தலைவராகவும், 1924-முதல் 1930-வரை தஞ்சை டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடென்டாகவும் திறம்படத் தொண்டு புரிந்தார். திருவையாற்று வடமொழிக் கல்லூரியில் தமிழ்வகுப்புக்களையும் முறையே வகுத்துத் தமிழ்

மாணவர்கள் நற்பயன் பெறச்செய்த பெருமை இவருக்கே உரியதாகும்.

சென்னை மண்டிலத்தில் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றங் கருதித் தொண்டாற்ற வகுக்கப் பெற்ற ஜஸ்டிஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களில் இவர் ஒருவராவர். பழைய சென்னைச் சட்டசபை யுறுப்பினராக இவர் 1930 முதல் இருந்து வந்தார்; இலண்டன் வட்டமேசை மாநாட்டு உறுப்பினர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று இலண்டன் சென்று வந்தார். 1935 முதல் 1937 வரை சென்னை இறையாட்சிக் குழுவின் உள்நாட்டு அமைச்சராக இருந்துவந்தார்.

புதிதாக நடைமுறையில் வந்துள்ள சென்னை அசெம்பிளி உறுப்பினர்களில் ஒருவராக இவர் 1935 தேர்தலில், இடம் பெற்றார். இடைக்கால மந்திரிகளில் ஒருவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்று மூன்றரைத் திங்கள் பணியாற்றினர். பின்னர் அசெம்பிளியில் எதிர்ப்புக் கட்சித் தலைவராக அமர்ந்து கேட்டார்ப்பிணிக்கப் பேசித் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் தொண்டாற்றிவந்தார்

சென்ற ஜனவரித் திங்கள் 18-ஆம் நாள்தான் இவர் இலண்டன் இந்திய அமைச்சரவை உறுப்பினராக அமர்த்தப் பெற்றார். அப்பதவியேற்பான் கராச்சியிலிருந்து கிளம்பிய ஹானிபால் என்ற வானூர்தி யிவர்ந்து இவர் இம் மார்ச்சுத் திங்கள் முதல்நாட் காலை இலண்டனுக்குப் புறப்பட்டார். மறுநாள் பாரசீக வளைகுடாவிற் செல்லும்போது அவ்வூர்தி திடீரென மறைந்துவிட்டதாகத் திடுக்கிடும் செய்தி எட்டிற்று. இதுவரை அவ்வூர்தி, அவ்வூர்தியிற் சென்ற இப்பெரியார், இவருடன் சென்ற ஏழு ஐரோப்பியர்கள் ஆகியோரைப்பற்றி எத்தகைய செய்தியுங் கிடைக்கவில்லை. தமிழ் மக்கள் தவிக்கின்றனர். மாயமாய் மறைந்த இப் பெரியார் இறைவன் அருளால் நலமே மீண்டார் என்ற நற்செய்தி கிடைத்துத் தமிழர் மனங் குளிர்வார்களா?

முதலியார். செ. இராசநாயகம்

சென்ற 17-1-40 புதன்கிழமை கொழும்பு 'பாண்ஸ் பிளேசி'ல் தமதில்லத்தில் தமிழ்ப் பெரியார் முதலியார் திரு. செ. இராசநாயகம் அவர்கள் தமது பூதவுடலை நீத்தார்.

முதலியாருக்கு வயது 70, பதின்மூன்று வருடங்களின் முன்னர் வடமாகாண உதவி ஏஜெண்டாக இருந்து இளைப்

பாறி யிருந்தார். அரசாங்க உத்தியோகத்தில் சாதாரண கிளாக்கராகச் சேர்ந்த முதலியார் அவர்கள், 'சிவில் சேர்விசு' க்கு உயர்ச்சி பெற்று வந்த வரலாறு, அவரது விவேகத்துக்கும், சலியா உழைப்புக்கும் ஒரு அத்தாக்ஷியாகும் மேலும் அவர் வெளியிட்டுள்ள நூல்கள். Ancient Jaffna, 1926. Katragama 1930. யாழ்ப்பாணச் சரித்திரம் 1933. இன்னும் இவை போல்வன பலவுள. அவர் சைவசித்தாந்தநூற் பதிப்புக்கழகப் பங்காளியுமாவர். அவர் குடும்பத்தார்க்கு ஷெ கழகத்தார் தங்கள் ஆறுதல் மொழிகளைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

திரு. செ. தெ. நாயகம் அவர்களின் மாமனார்

தமிழாசிரியர்

திருவாளர் மு. போ. ஈசுரமூர்த்தியா பிள்ளையவர்கள்

சிலநாட்களாக நோய்வாய்ப்பட்டு 23-1-1940ல் தம்முடைய 80-வது வயதில் முன்னீர்ப்பள்ளத்தில் காலஞ் சென்றார்கள். இறைவன் அவர்கள் உயிர்க்கு அமைதி யளிப்பாராக.

மழைவளம் வேண்டி வழிபடல்

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(கருத்துரை) வானத்தினின்று மழைத்துளி வீழ்ந்தாலல்லாமல், பசுமையாகிய புல்லின் முளைகளைக்கூடக் காணுதல் இயலாதாய்விடும்.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின் றுடற்றும் பசி.

(கருத்துரை) வேண்டுங் காலத்திலே மழை பெய்யாது மறையுமாயின், கடல்சூழ்ந்த அகன்ற உலகத்திலே பசியானது நிலை பெற்று உயிர்களை வருத்தும். (திருக்குறள்)

முற்காலத்தில் மக்கள் கடவுளை நினைத்தலும், வாழ்த்தலும், வணங்குதலும் செய்தமையினாலேயே ஆண்டவன் அவர்கள் வேண்டுதலுக்கிரங்கி மழைபொழியச்செய்து உலகத்தைச் செழிப்புறச் செய்து வந்தான். **சிலப்பதிகார** காலத்தில் மக்கள் மழைக்கெனவே இந்திரவிழா எடுத்திருப்பதாகக் காண்கிறோம். இப்போது மழைவளம் வேண்டி ஆண்டவனை வணங்

குவோர் நூற்றுக்கு ஒருவர்கூட இல்லை. "அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்றபடி நாம் மழைக்காக இறைவனிடம் அழுது வேண்டினால் அவன் கட்டாயம் மழை பொழிவிப்பான்.

எத்தனையோ பேரறிவுடையவர்கள் (அற்புதமான) வியப்பான பொருள்களை யெல்லாம் நாடோறுங் கண்டறிந்து வருகின்றார்கள். ஆனால் மழையை வருவிக்கமட்டும் எவராலும் முடியாது. எல்லாம்வல்ல இரக்கமுள்ள ஆண்டவனருளாலேயே மழை பெய்ய வேண்டியிருத்தலால் தெய்வத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளில் கடவுளதிகாரத்தை முதலில் வைத்தும், அவனருளாகிய மழையைப் பற்றிக்கூறும் வான் சிறப்பு என்ற அதிகாரத்தை அதற்கு அடுத்தபடியாக வைத்தும் அருளியிருக்கின்றார். ஆதலால் இதுகண்டது முதலே மக்களெல்லோரும் ஒருமனப்பட்டு ஒன்று சேர்ந்து ஆண்டவனைத் திருக்கோயில்களிலும், வீடுகளிலும், அவரவர்கள் மறைகளை ஓதி வழிபாடு புரியும்படி வேண்டிக்கொள்கிறோம். கோவிலதிகாரிகளும் அதற்கு ஆவன செய்வார்களாக.

திருநெல்வேலி சைவசித்தாந்த சங்கத்தார்.

திருவள்ளுவர் திருநாள்

சென்ற 25-2-40 ல் திருநெல்வேலி வீரவநல்லூர் உயர்தர இசை ஆரம்பப் பாடசாலையில் திரு T. K. அறம்வளர்த்தநாத பிள்ளை அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் மிகவும் சிறப்பாக கொண்டாடப் பெற்றது. ஊர்வலமும், அன்ன மளிப்பும், சொற்பொழிவுகளும், காலட்சேபமும் நன்கனம் நடைபெற்றன.

மதிப்புரை

"இனி நாம் செய்யவேண்டுவது யாது?"

இரஷ்யப் பேரறிஞர் லியோ டால்ஸ்டாய் அவர்களால் இயற்றப்பெற்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. மொழிபெயர்த்தவர் திருவண்ணாமலை திரு ரா. விசுவநாதன் அவர்கள். பக்கங்கள் 211. இதனை சக்திமலர் 1-ஆக, சென்னை அரமனைக்காரத் தெரு 52-ல்உள்ள சக்தி காரியாலயத்தார் மிகவும் அழகாகப் பதிப்பித்துள்ளார்கள். தமிழ் நாட்டார் படித்தின்புற வேண்டிய நூல். விலை அணா 12.

"பிரதாப முதலியார் சரித்திர" ஆசிரியர்

காலஞ்சென்ற

மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளை அவர்கள்.